Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் எம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 43	சௌமிய ஞு தை ஜனவரி 1970	இதழ் 1

ஒலிபரப்புப் பகுதி

சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் மறைவு.

(ஆசிரியர்)

எண்பது ஆண்டு கடந்த சைவப் பெரியாரான கோவை கிழார் என்று பெயர் பெற்றிருந்த இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் 3-12-1969இல் இறைவன் திருவடி சேர்ந்த செய்தியை மெய்யன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். சமாஜம் அவர் குடும்பத்தினருக்குத் தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர் ஆன்மாவுக்கு நடராசப்பெருமானது குஞ்சித்த சேவடியின் கீழ்க் கும்பிட்டேயிருக்கும் பெருவாழ்வு அருள, இறைவன் திருவருளை வேண்டுகிறது.

இவர் 30-11-'888இல் கோயமுத்தூரில் தேவாங்கர் மரபில் பிறந்தார். முறையாகப் பயின்று B. A., B. L. தேறி, வக்கீல் தொழில் செய்தார். சென்னைக் கல்லூரியில் பயின்றபோது டாக்டர் சாமிநாத ஐயரிடமும் சிறிது காலம் தமிழ் பயின்றிருக்கிறார். தேவாங்கர் வகுப்பில் இவரே

முதல் முதல் கோவையில் பட்டம் பெற்றவர். இளமை முதல் செய்யுள் எழுதுவதும் பழைய நாணயம் சேகரிப்பதும் பொழுது போக்காகக் கொண்டார். இளமையிலேயே சேரிகளில் தொண்டு செய்தார்; மதுவிலக்கு அல்லது மிதக் குடிப் பிரச்சாரமும் இவர் செய்த ஒரு தொண்டு. அக்காலம் காங்கிரசிலும் காங்கிரஸ் மகாநாடுகளிலும் இவர் கலந்து கொள்வதுண்டு. பின்னர் நகரசபை போன்ற பல பொது ஸ்தாபனங்களில் உழைத்தார். மலைச்சாதியினர் முன்னேற் றத்திற்காகச் சேவை செய்தார். பிரயாணத்தில் இவருக்கு மிக்க ஆர்வம். பல நகரங்கள் சுற்றி, யாழ்ப்பாணமும் சுற்றி, மக்கள் வாழ்க்கையை ஆராய்ந்தார். கூட்டுறவுத் துறையில் கலந்து உழைத்தார். கோவைத் தமிழ்ச் சங்கத் தில் செயலாளராக இருந்து, ஞானியார் சுவாமிகள் போன்ற பெரியோரைக் கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்துவித் தார். அதன் பெயரால் "கொங்கு மலர்" என்ற ஒரு பத் திரிகையும், கொங்கு நாட்டு இலக்கியம், சமயம், சரிதம் போன்ற மிகப் பலவான சிறு நூல்களும் வெளியிட்டார். அபீஷியல் ரிஸீவர் பதவியில் ஐந்து வருட காலம் இருந்து அலுப்பினால் அதை விட்டார்.

சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கு உறு துணையாக இருந்து வந்தார். இத்தொடர்பினால் சமாஜத் தொடர்பும், பல சைவ சபைத் தொடர்புகளும் ஏற்பட்டன. 1933ல் சமாஜ மாநாடு கோவையில் நடந்தபோது இவரே முழுப்பொறுப்பேற்று நடத்தினார். 1940ஆம் ஆண்டு மயிலத்தில் நடந்த சமாஜ ஆண்டு விழாவில் இவர் தலைமை வகித்தார்; அவ்விழாவில் இளைஞர் மகாநாட்டுத் தலைமைப் பணியும் எமக்கு இருந்தது. பின்னர் 1945 இல் சிவகாசி யிலும் சமாஜத் தலைமை வகித்திருக்கிறார். எப்பொழுதும் சமாஜத்திற்குச் சென்னையில் சொந்தக் கட்டிடம் இருக்க வேண்டும் என்று முயன்றார். எண்ணற்ற கட்டுரைகள் சித்தாந்தம் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். 46–53, 56–57 சித்தாந்தம் பத்திரிகை ஆசிரியராகவும் இருந்தார்.

தாமே பல வகுப்புகளும் நடத்தியிருக்கிறார், பேச்சுக்களில் நேர ஒழுங்கு, குறித்த பொருள் பற்றிய ஒழுங்கு என்பன இவரிடத்தில் காணப்படும்; பிறரிடத்திலும் வற்புறுத்து வார். கல்வெட்டு ஆராய்ச்சி இவருடைய பொழுதுபோக்கு. சிறுகதையில் இவருக்கு ஆர்வம் அதிகம். சிறுகதைத் திரள் என்ற நூல் எழுதி வெளியிட்டார்.

1940இல் அறநிலைய ஆணையாக நியமனம் பெற்று, ஐந்து ஆண்டு காலம் பதவியில் இருந்தார். மிக நேர்மை யான முறையில், ஆலயத்திற்கும் சைவத்திற்கும் ஏற்றம் உண்டாகும் முறையில், இவர் தமது நிர்வாகத்தை நடத் தினர். கணக்கற்ற சிவ தலங்களை இவர் பார்வையிட்டிருக் கிறார். எல்லாவற்றையும் குறிப்பெழுதி வைத்திருந்தார். ஆலயங்களில் தலவரலாறு எழுதும் முறை இவரால் விளைந் தது. ஆலய வருவாயில் ஒரு தொகையை சமயப் பணிக் குச் செலவிட வேண்டுமென்று உத்தரவிட்டார்; வெளியான வரலாறுகளை இவரே பார்த்துத் திருத்திக்கொடுத்தார். சில ஆலயங்களில் காட்சிச் சாலைகள் நிறுவ உத்திரவிட்டார். அருச்சகர் மகாநாடு நடத்தினர். மிகப்பலவான கோயில் களைப் பழுதுபார்க்கக் காரணமாயிருந்தார். சென்னைப் பல்கலைக் கழக சபையில் அங்கத்தினராகவும் இருந்தார். ஆணையர் பதவியை விட்டு விலகிக் கோவை சென்றதும் கோவையில் தேவாங்கர் உயர்நிலைப்பள்ளி தொடங்க எல்லா ஏற்பாடுகளும் செய்தார்.

எல்லோரும் சமய வளர்ச்சிக்கு உழைக்க வேண்டு மென்ற கொள்கையுடையவர். கடைசியாக இவரை யாம் பார்த்தது 1965இல் சிதம்பரத்தில் நடந்த சமாஜ வைரவிழா வில் இவர் வந்திருந்தபோது. பிறர் உதவியின்றி நடமாடு வது கடினமாயிருந்தும், மிக்க வைராக்கியத்தோடு அங்கு வந்தார். இவர் வாழ்க்கையில் அனேக நியமங்கள் உடை யவர். அதிகாலையில் எழுந்து உலாவி வந்து திருமுறை ஓதிப் பின் தாம் கண்ட காட்சியைச் சிறு பாடல்களாக எழுதுவார். ஒரு பாடலேனும் எழுதாமல் உண்பதில்லை

என்பது இவர் நியமம். தினந்தோறும் பேச்சு அல்லது நலைமை என்ற அலுவல் இருந்து கொண்டேயிருக்கும். மனைவியாரும் தாமும் சிவபூசை செய்பவர்கள். பேச்சைக் குறைத்துச் செயலில் ஈடுபடவேண்டுமென்பது இவர் கொள்கை. இவர் குழந்தை உள்ளம் படைத்தவர். பதவிக் காலத்தில் பொய்மைக்கு இடம் கொடுத்ததில்லை. தம் கடமையை அயராது செய்தார். ஒரு தடவை அறநிலைய ஆணையாளராகப் பத்ராசலம் சென்றபோது, குறிப்பிட்ட நேரத்தில் பகலில் போய்ச் சேரமுடியவில்லை. இரவு மணி 10 க்குத்தான் போக முடிந்தது. எனினும், உடனே நீராடிவிட்டுத் தாம் பார்க்க வேண்டிய கணக்கு வழக்கு அலுவல்களைப் பார்த்தார்.

இவருடைய ஒழுங்கை, இவர் காலத்தில் சித்தாந்தம் பத்திரிகைப் பகுதிகளை ஒலிபரப்பு, தலம், சமயம், சாத்திரம், கலை, கவி ஆராய்ச்சி, விரிவுரை என்ற பகுதிகளாகப் பிரித்துச் செம்மைப் படுத்தி வைத்திருந்ததன் மூலம், நன்கு காணலாம் தமிழும் சமயமும் இரு கண்ணெனை வளர்த்தவர். இவரோடு பேசினல் பல செய்திகள் அறியலாம். கோவை ஜில்லாவுக்கு இவர் ஒரு கலைக்களஞ்சியமாக விளங்கினர்.

இன்று கோயில்கள் நல்ல நிலைமையில் இருப்பதற்கு இருவர் பெயரைக் குறிப்பிட்டால், முதற்பெயர் இவருடைய பெயராக இருக்கும். இத்தகைய செயல்வீரர்கள் குறைந்து கொண்டு வருகிறார்கள். பழகியவர்களுக்கெல்லாம், இவருடைய பண்பு மறக்க முடியாது. எப்போதும் நம்மைக் கேள்வி கேட்டுக்கொண்டிருப்பார். இவருடைய மறைவு உண்மையிலேயே பல தமிழன்பர்களுக்கு மிக்க மனவருத்தம் தரும். யாரையும் மதித்துப் பேசும் இவருடைய இயல்பும், கலை இலக்கியம் சாத்திரம் சமயம் பற்றி இவருக்கிருந்த அறிவும் இன்று காண்பதற்கரியவை. மறைந்த பெரியார் நாமம் வாழ்க.

திருமுறைப் பகுதி

தஞ்சாவூர்த் தட்டான்

(வித்துவான் அம்பை சங்கரனார்)

சிவானந்தமாலை என்னும் சிறந்த சைவ நூல் ஒன்று உள்ளது. அது திகளறு போத ஆசிரியரான சிற்றம்பல நாடிகளின் மாணாக்கராகிய சம்பந்த முனிவர் என்னும் பெரியாரால் இயற்றப் பெற்றது. 414 பாக்களைக் கொண்ட இவ் விழுமிய நூலில் பல சிறந்த பாக்கள் காணக் கிடைக்கின்றன. அவற்றிலிருந்து பல உண்மைகளையும் தெரிய முடிகின்றது. அவ்வாறு அந்நூல் தெரிவிக்கும் பல உண்மைகளுள் ஒன்றினைக் கீழே காண்போமாக.

திருமந்திரம் பத்தாந் திருமுறையைச் சார்ந்தது என்பது யாவரும் அறிந்ததே. அதன் கண்ணுள்ள பல பாக்கள் கை நழுவி விட்டன என்பது ஆன்றோர் கொள்கை. இடைச் செருகல்களும் ஏற்பட்டிருக்கலாம். அவற்றை இது இடைச் செருகல் செய்யுள் இது உண்மைச் செய்யுள் என்று நுனித்தறிந்து கூறுதற்குரிய பழுத்த ஞானானுபவம் நம்மனோர்க்கில்லை. ஆனால் பல பாக்கள் கிடைக்கவில்லை என்பது மாத்திரம் உண்மை அவ்வாறு கிடைக்கப் பெறாத செய்யுள்களுள் ஒன்றினை இச் சிவானந்தமாலை ஆசிரியர் படித்திருக்கிறார். அப்பாடலின் விழுமிய பொருள் அவர் மனத்தை மிகவும் ஈர்த்திருக்கிறது. ஆகவே தம் நூலில் அத் திருமந்திரச் செய்யுளின் முதற் குறிப்பைக் கூறி அது தன்னை எவ்வாறு நினைக்கச் செய்து ஆட்கொண்டது என்றும் மிக வியந்து போற்றுகின்றார். சிவானந்தமாலையுள் 368ஆம் செய்யுளாக இது விளங்குகிறது. அச்செய்யுள் வருமாறு :—

தஞ்சாவூர்த் தட்டான் எனமூலர் சாற்றுநெறி
நெஞ்சால் நினைவுற்றேன் நின்மலர்த்தாள்–எஞ்சாதே
தன்னையழித் தெற்பண்ணித் தன்னில் எனையழித்துத்
தன்னைமிகப் பண்ணுதலாற் றான்.

இச் செய்யுளிலிருந்து தஞ்சாவூர்த் தட்டான் என்ற தலைப்பையுடைய செய்யுள் திருமூலரால் இயற்றப்பட்ட திருமந்திரத்திலுள்ளது என்பது வெளிப்படை. இத் திரு மந்திரச் செய்யுளைப் படித்தலான் அப்பெரியார் பெற்ற ஞானானுபவத்தையும் இச் சிவானந்தமாலைச் செய்யுளின் பிற்பகுதி மூலம் விளக்குகிறார்.

ஆகவே 'தஞ்சாவூர்த் தட்டான்' என்ற முதற்குறிப் புடைய திருமந்திரச் செய்யுள் தற்போது வெளிவந்துள்ள திருமந்திரப் பதிப்புக்களில் எதிலாவதிருக்கின்றதாவெனில் அறவே காணோம். ஆனால் இச் செய்யுள் திருமூலரால் இயற்றப்பட்ட திருமந்திரத்திலுள்ளது என்று சிவானந்த மாலை வலியுறுத்துகின்றது. அதனால் கைநழுவவிடப்பட்ட திருமந்திரச் செய்யுள்களுள் இதுவும் ஒன்றெனத் தெளி வாய்த் தெரிய வருகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் டாக்டர் உ. வே. சுவாமி நாத ஐயர் சுவடி நிலையத்திற்கு திருமந்திர ஏடுகளைப் பார்க் கச் சென்றிருந்தேன். அங்கு பல ஏடுகளைப் பார்க்க முடிந்தது. அவ்வமயம் அங்கு ஓர் அருமையான திருமந்திர உரையேடும் இருந்தது. அவ்வுரை மிகவும் சிறந்ததாயிருத் தலின் அவ்வுரையினை அவ்வப்போது முடிந்த மட்டும் சித்தாந்த இதழ் வாயிலாக வெளியிட்டும் வந்தேன். அவ் வுரை எழுதினர் யாவர் எனக் கூற இயலவில்லை. ஆனால் அவர் யோக நெறியில் முற்றக் கைவந்தவர் என்பது மட்டும் உண்மை. அந்த ஏட்டில் "தஞ்சாவூர்த் தட்டான்" என் னும் செய்யுள் காணப்பெற்றது. அதைக் கண்டதும் யானடைந்த மகிழ்ச்சிக்கோர் எல்லையின்று. கண்ணுள் ளான் இழந்து பெற்றாற் போன்று மிகப் பூரிப்படைந்தேன். அச் செய்யுளும் அதற்கு அவ்வுரையாசிரியர் உரையும் மிகச் சிறந்தன. இச்செய்யுளும் உரையும் முன்னரே சித்தாந்த இதழ் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும் சிவா னந்தமாலைச் செய்யுள் குறிப்பிட்டவாறு இஃது எவ்வாறு

மிகச் சிறந்திலங்குகிறது என்பதை ஈண்டுச் சற்று விளக்க முறக் காண்போமாக.

அத் திருமந்திரச் செய்யுள் வருமாறு:—

தஞ்சாவூர்த் தட்டான் தலத்துக்கு நாயகன்
மஞ்சாடி கொள்ளும் வழக்கின்றி மன்றேறான்
துஞ்சான் உறங்கான் தொழில்செய்யான் சோம்பிரான்
அஞ்சாறு நாளைக் கவதிதந் தானே.

இதன் (பாகியார்த்தம்) வெளிப்படையான பொருள் வருமாறு:— தஞ்சாவூரில் அப்பக்கங்களிலேயே சிறந்தவனாய் ஒரு தட்டான் இருந்தான். யார் நகை செய்யப் பொன் கொடுத்தாலும் தாய்ப் பொன்னிலும் மாப்பொன் எடுக்குமா போன்று 2 குன்றிமணி (மஞ்சாடி) பொன்னாவது சாமர்த்தியமாக அவன் எடுத்துக் கொள்வது வழக்கம். இது காரணமாக எக்காலத்தும் யாரும் வழக்குத் தொடுத்து நியாய சபைக்கும் அவன் சென்றது கிடையாது. வருவாயின்மையால் இறக்க வேண்டிய நிலையிலுமவனில்லை. எப்பொழுதும் வேலையிருத்தலால் உறங்க வேண்டிய நிலையிலுமில்லை. எல்லாருடைய வேலையையும் செய்கிறேனென்று ஒத்து வாங்கிக் கொண்டு தக்க காலத்து அவ்வணிகளைச் செய்து கொடுக்க வேண்டுமே எனக் கவலையும் கொள்ளாது தொழிலை நன்கு செய்யவும் மாட்டான். ஆனால் அவன் சோம்பேறியுமல்லன். ஆசைமிக்கவனா யுழல்வானாயினான். அவனிடம் அணி செய்து தரப் பொன் கொடுத்தவர்கள் எவரும் ஐந்து அல்லது ஆறு நாள் சென்று கேட்டால்தான் செய்த அணிகளைக் கொடுப்பது வழக்கம். அத்தகைய துன்பத்தைக் கொடுத்து வந்தான் அத்தட்டான் என்பதாம்.

ஆனால் இச்செய்யுளின் உண்மைப் பொருள் இஃதன்று. இது குரு உபதேசப் பெருமையைக் கூறுகிறது.

இதன் பதவுரை வருமாறு:—

தஞ்சா —சாகிற தொழிலையே உடைமையாயுள்ளவனையும்
வூர் —இருப்பிட முள்ளவனையுமிருந்தும்,

தட்டான் —தானதில் பொருந்தாதவனாய்:

தலத்துக்கு நாயகன்—(பிருதிவி மண்டலம்)
சலமண்டலம், தேயுமண்டலம், வாயுமண்டலம், ஆகாச மண்டலம், சூரியமண்டலம், சோமமண்டலம், தாரகா மண்டலம், அக்கினிமண்டலம் ஆகிய). நவமண்டலங்களுக்கு அப்பாலிருக்கும் தலைவனாய் (இந் நவமண்டலங்கள் நம் சரீரத்திலேயே யுள்ளன. அண்டத்திலுள்ளது பிண்டத்திலுமுண்டு என்னுமுண்மையையுமோர்க)

மஞ்சாடி —(நீங்கும் வாயு பன்னிரண்டங்குலத்தில்) எட்டங்குல வாயுவை

கொள்ளும் —பயன்படுத்தும்

வழக்கன்றி —நூல்களாலே கூறப்படுகின்ற சடங்குகளாலன்றி

மன்றேறான்—வெளிப்படான்

துஞ்சான் —இறத்தலும்

உறங்கான் —மயக்குறுதலும்

தொழில் செய்யான்—ஆசையால் அலைதலும்

சோம்பிரான்—சோப்புதலுமில்லாதவன்

அஞ்சாறு—ஐம்புல வழியையும் ஒடுக்கில்

நாளைக்கவதி தந்தானே—துன்பமாய்க் கழிந்த நாளும் பயன் படத்தக்க நிலையில் மேம்படச் செய்வான் என்றபடி.

சாகிற தொழிலையே உடைமையாயும் இருப்பிடமாயுமுள்ளவனாயும் இருந்தும் தான் அதில் கூடாதவனாய் எட்டங்குல வாயுவைப் பயன்படுத்தும் வகையை நூல்களால் கூறப்படுகின்ற முறைகளாலன்றி வெளிப்படுத்தாதவனாய் இறத்தலும் மயக்குறுதலும் ஆசையால் அலைதலும் சோம்புதலும் அற்றவனாய் ஐம்புல வழிகளையும் ஒடுக்கிக் கொண்டால் வீணே கழிந்த நாளையும் பயன்படத்தக்க நிலையில் செய்யும் பெருமை மிக்கவன் குரு என்றபடியாம்.

இனி சிவானந்தமாலையாசிரியர் நோக்குப்படி பொருள் காண்போம். தஞ்சாவூர்த் தட்டான் எனத் திருமூலர் கூறியருளிய திருமந்திரப் பாடலின் வழி குரு உபதேசத்தின் பெருமையை மனத்தால் நினைந்தேன். அதன்படி பயிற்சி செய்து வந்தேன். ஏன் எனின் அவ்வாறு குரு சொற்படி ஒழுகி வந்தால் தன்னையழிக்கும் நிலை ஏற்படும். ஈண்டு தான் என்பது இறைவனைக் குறிக்கும். எல்லாம் வல்ல பெருமான் பரம கருணாகர மூர்த்தியாதலின் உயிர்களுக்கிரங்கி அருளுருவத் திருமேனி கொண்டு தாயேயாகி வந்து அருள் சுரக்கும் நிலைதான் தன்னையழிக்கும் நிலை எனப்படும். ஈண்டு அழித்தல் என்பது உயர்நிலையை விட்டுக் கீழிறங்கல் என்னும் பொருளதாம். இரண்டாவது நிலை எற்பண்ணல் என்பதாகும். யான் என்பது ஈண்டுயிரினைக் குறிக்கும். பதியினுடைய திருவருள் விலாசம் உயிரினிடத்தே பதிந்து உயிரும் அருளுருவாய் விளங்கச் செய்தலாகும். பண்ணுதல் என்பது பக்குவப்படுத்தல் என்னும் பொருளதாம். மூன்றாவது நிலைதன்னில் என்னையழித்தலாகும். அஃதாவது இறைவன் உயிரினை ஆட்கொண்டு ஒடுக்கியருளும் தன்மையாகும். ஈண்டு அழித்தல் என்பது ஒடுக்குதல் என்னும் பொருளின் பாற்பட்டது. நான்காம் நிலை தன்னை மிகப் பண்ணுதல் என்பதாகும். அஃதாவது இறைவன் தன்னுலாட்கொள்ளப்பட்ட உயிருக்குப் பேரானந்தப் பெருவாழ்வினையளித்துத் தானே மேலாய் விளங்கும் நிலையாகும். இந்நான்கு நிலைகளையும் தெரிந்து பேரானந்தப் பெருவாழ்வு பெற அது வழிகாட்டியாயிருந்தது என்று குரு உபதேசப் பெருமையை அவ்வாசிரியர் மிக அழகுறக் கூறுகிறார். ஆகவே இதுபோன்று மறைந்த கருவூலங்களாம் நம் தமிழ் இலக்கியங்களை வெளிக் கொணர்தல் அறிஞர்களின் கடன் என்பதை மனத்துட் கொள்ள வேண்டும். மேலும் கண்டதே காட்சி கொண்டதே கோலமென்றில்லாமல் நாமும் குரு உபதேசம் பெற்று அதன்படி நடந்து பெறற்கரிய இம் மானுடப் பிறவி வாழ்வைப் புனிதப் படுத்திக் கொள்வோமாக.

சமாஜ ஆண்டுவிழா

[க. கலியாணம் எம். ஏ., டி. எக்கான்.,]

சென்னை சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 64-ஆம் ஆண்டுவிழாவும், சைவர், சைவமங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும் 27—12—69, 28—12—69 சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காஞ்சிபுரம் ஸ்ரீ கச்சபேசர் திருக்கோயிலில் மெய்கண்டார் காவணத்தில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. சென்னை அரசாங்க முன்னாள் துணைச்செயலாளர் இராவ் சாகிபு திரு. நல். முருகேச முதலியார், பி. ஏ. அவர்கள் சைவர் மாநாட்டிற்கும், தருமபுரம் வித்துவான் திருமதி ப. நீலா அம்மையார் அவர்கள் சைவ மங்கையர் மாநாட்டிற்கும், மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் சைவஇளைஞர் மாநாட்டிற்கும் தலைமை வகித்தார்கள்.

சைவமெய்யன்பர்களும், சமாஜ உறுப்பினர்களும் வெளியூர்களிலிருந்து முதல் நாளே காஞ்சிபுரம் வந்து சேர்ந்தனர். 27—12—69 சனிக்கிழமை காலை 7-மணிக்கு மாநாட்டுத்தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டனர். மேளவாத்தியம், கொடி, குடை, யானை, குதிரை முதலிய விருதுகள் முன் சென்றன. அதிர்வெடி அதிர்ந்து கொண்டிருந்தது. ஓதுவார் மூர்த்திகள் திருமுறைப் பாரா யணம் செய்து கொண்டு வந்தனர். முதலில், கல்வியிற் கரையிலா காஞ்சி மாநகரில் நடு நாயகமாக விளங்கும் ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயிலில் வழிபாடு செய்தனர். பின்னர் குமரகோட்டத்திலும் சென்று வழிபாடாற்றினர். திரளான மக்கள் உடன்வர மாநாடு நடைபெற இருக்கும் ஸ்ரீ கச்ச பேசர் திருக்கோயிலை அடைந்து அங்கும் வழிபாடு இயற்றினர்.

காலை 9-மணிக்கு மாநாடு தொடங்கியது. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. A. N. நடராஜன் ஐ. ஏ. எஸ். அவர்கள் இடபக்கொடியை ஏற்றிவைத்துக் கொடியின்

தத்துவத்தைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்கள். வரவேற்புக்குழுத்தலைவர் சௌகார் திரு. எஸ் ஆர். டி. சம்பந்தமுதலியார் அவர்களின் சார்பாக வரவேற்புக்குழுச் செயலாளர் திரு. வச்சிரவேலு முதலியார் பி. ஏ., எல். டி., அவர்கள் வரவேற்புரையை வாசித்தார்கள். பின்னர், காலஞ்சென்ற தமிழ் மூதறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் எம். ஏ., எல். டி., எம். ஓ. எல்., பிஎச். டி, அவர்களின் திருவுருவப் படத்தை திரு சீ. இராமலிங்கனார் எம். ஏ., அவர்கள் திறந்து வைத்து, டாக்டர் அவர்கள் மிகச் சிறிய அலுவலிலிருந்து உழைப்பால் உயர்ந்த உத்தமர் என்பதை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். டாக்டர் அவர்களின் வாழ்க்கை வரலாறு இதழ் ஒன்று கூட்டத்தினர் அனைவருக்கும் வழங்கப்பட்டது. டாக்டரின் திருவுருவப் படம் மாநாட்டுப் பந்தலில் கம்பீரமாகக் காட்சியளித்தது. திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார் எம். ஏ. அவர்கள் சமாஜ ஆண்டு அறிக்கையையும், வெளியூர்களிலிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளையும் வாசித்தார்கள். பின்னர் வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் சமாஜக் கட்டிடத்திற்கு நன்கொடை அளிக்கவும், சமாஜத்தின் ஆயுள் உறுப்பினராகும் படியும் அவையினருக்கு வேண்டுகோள் விடுத்தனர். தாமே கட்டட நிதிக்காக ரூ 101-ம் ஆயுள் உறுப்பினர்க்காக ரூ 50-ம் மாநாட்டுத் தலைவரிடம் கொடுத்தனர். அதையடுத்து சென்னை மாநிலக்கல்லூரி வடமொழித் துறைத்தலைவர் திரு திருஞான சம்பந்தம் பிள்ளை அவர்கள் சித்தாந்த ஆங்கிலச் சிறப்பு மலரை வெளியிட்டுப் பேசினார்கள். அவர்களும் திரு க. வெள்ளைவாரணனாரும் தாங்கள் ஆயுள் உறுப்பினராவதற்கு ரூ. 50/- முறையே அளித்தார்கள்.

பின்னர், மாநாட்டுத் தலைவர் திரு நல். முருகேசமுதலியார் அவர்கள் தங்களுடைய தலைமைப் பேருரையை யாற்றினார்கள். சைவ சமயத்தின் மேன்மை, சித்தாந்தத்தின் செம்மை, காஞ்சிமா நகரின் பெருமை முதலியவற்றைப்

பற்றிய பொருள்பொதிந்த சொற்பொழிவாக அது அமைந்திருந்தது. (முழு விவரம் வேறு இடத்தில் காண்க). அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறைப் பேராசிரியர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் "நெய்யின் உறுசுவை" என்னும் பொருள்பற்றி ஒரு அரிய சொற்பெருக்காற்றினார்கள். வேதம்-பசு, ஆகமம்-பால், நால்வர் தமிழ்-நெய், மெய்கண்டார் சிவஞானபோதம்-சுவை. இதை அடிப்படையாகக் கொண்டு திருமுறையாசிரியர்களின் பல மேற்கோள்களை எடுத்து எவ்வாறு மெய்கண்டார் சிவஞானபோதத்தில் அமைத்துக் கொண்டார் என்பதைப்பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். திருமுறையாசிரியர்களை எவ்வாறு மெய்கண்டார் தம் பன்னிரண்டு சூத்திரங்களுக்கும் பயன்படுத்திக் கொண்டார் என்பதற்கு பல ஒற்றுமை நயங்களைச் சொன்னார்கள். அத்துடன் முதல் நாள் முற்பகல் நிகழ்ச்சி முடிந்தது.

அன்று பிற்பகல் 3-மணிக்குமேல் மாநாட்டிற்கு வெளியூரிலிருந்து வந்திருந்தோர் தங்கியிருந்த இராசகோபால் கலியாண மண்டபத்தில் சமாஜ உறுப்பினர் பொதுக் கூட்டம் சமாஜத் தலைவர் வித்துவான் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு) அவர்களின் தலைமையில் நடந்தது. சமாஜ அலுவலர் தேர்வு, தீர்மானங்கள் நிறைவேற்றல் முதலியவை நிகழ்ந்தன. (விவரங்கள் பின்னர் வரும்). மாலை 5 மணிக்கு மாநாட்டுப் பந்தரில் சைவர் மாநாடு தொடங்கியது. தலைவர் அவர்களின் முன்னுரைக்குப்பின் மாவட்ட வருவாய் அலுவர் திரு. சண்முகம் அவர்கள் "அறவுரை" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். நாம் எல்லோரும் அன்றாட வாழ்க்கையில் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றித் தகுந்த உதாரணங்களுடன் விளக்கினார்கள். "சித்தாந்தம்" இதழாசிரியர் திரு. மு. அருணாசலம் எம். ஏ. அவர்கள் "திருப்பள்ளி எழுச்சி" என்பது பற்றிப் பேசுகையில் பண்டைக் காலத்தில் படையெடுப்பில் அரசரைத் துயில் எழுப்பும் வழக்கம் இருந்த

தென்றும், பின்னர் இறைவனைத் துயிலெழுப்பும் முறையால் மாணிக்கவாசகர் திருப்பள்ளியெழுச்சி பாடினர் என்றும், தொண்டரடிப் பொடியாழ்வாரும் பாடியுள்ளார் என்றும், பட்டினத்தடிகள் ஒற்றியூர்ப்போவார் அடியிற் பொடியணிதல் மருந்து என்று அருளியுள்ளார் என்றும், திருப்பள்ளி எழுச்சி 'எது எமைப் பணி கொள்ளுமாறு' என்று கேட்பதற்காகவே என்றும், இறைவனுக்கு அன்பு செய்வதே திருப்பள்ளி எழுச்சி யென்றும் விளக்கினர்கள். அடுத்துப் பேசியவர் 'திருக்கோயில்' இதழாசிரியர் திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள், தலைப்பு "அருளியல் தலைவன்" என்பது. இறைவனாகிய அருளியல் தலைவனின் குணங்களையும் அவன் தொண்டர்களின் செயல்களையும் எடுத்துச் சொல்லி, உலகியல் தலைவர்களாக உள்ளவர்களுக்கும் அவர்களின் கீழ்ப் பணிபுரிபவர்களுக்கும் உள்ள தொடர்புகளையும் எடுத்துக்காட்டி "ஆண்டான் அடிமைத்திறம்" தான் சிறந்ததென நிறுவிப் பேசினர்கள். வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளையவர்கள் "தீங்கனி" என்னும் பொருள்பற்றி விரிவுரை ஆற்றினர்கள். "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி", "புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி" — இதுதான் மாந்துதற்கேற்ற தீங்கனி யென்றும், பலா, மா, வாழை என்ற முக்கனிகளையும் விடச் சாலச் சிறந்ததென்றும் பல மேற்கோள்களுடன் பேசினர்கள். அதையடுத்துப் பேசியவர் பேராசிரியர்—வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், எம். ஏ., பி. ஓ. எல்., அவர்களாவர். பேச எடுத்துக் கொண்ட பொருள் "அப்பாலும் அடிசார்ந்தார்" என்பது. சேக்கிழார் கூறிய நாயன்மார்களுடன், காலம், இடம், சாதி, மதம் இவற்றிற்கும் அப்பாற்பட்ட அடியார்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று தகுந்த ஆதாரங்களுடன் கூறினர்கள். தலைவர் முடிவுரையுடன் மாநாடு முடிவடைந்தது. அன்றிரவு 10 மணிக்கு திருவாரூர் திரு. இராமச்சந்திர சர்மா அவர்கள் "திருநீலகண்டர்" கதாகாலட்சேபம்

செய்தார்கள். இரவு 12-மணிக்கு முதல் நாள் நிகழ்ச்சிகள் இனிது நிறைவேறின.

இரண்டாம் நாள் காலை 8-மணிக்கு உச்சிமேல் புலவர் கொள்கச்சியம்பதியின் நாப்பண் வீற்றிருக்கும் ஸ்ரீ காமாட்சி அம்மையின் திருக்கோயிலில் வழிபாடு நடந்தது. 9-மணி அளவில் மாநாட்டுக் காவணத்தில் சைவமங்கையர் மாநாடு தொடங்கியது. வித்துவான். திருமதி ப. நீலா அம்மையார் அவர்கள் தலைமைவகித்தார்கள். டாக்டர் திருமதி. தாரா நடராஜன் எம். பி., பி. எஸ்., டி. சி. எச்., அவர்கள் தொடக்க உரையாற்றினார்கள். தலைவியர் தலைமைப்பேருரை க்குப் பின், திருமதி புனிதவதி இளங்கோவன், பி. ஏ. பி டி. செல்வி மெ. மருதவாணி, பி ஏ., பி. டி.; திருமதி ஜயகுமாரி பாஸ்கரன் முதலிய மூவரும் முறையே "சுந்தரர் எடுப்பும் சேக்கிழார் தொடுப்பும்," "நோயும் மருந்தும்," "ஆளாவது எப்படியோ" என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவு கள்செய்தார்கள். தலைவியர் முடிவுரையுடன் சைவ மங்கை யர்மாநாடு பகல் 1-மணிக்கு இனிது முடிந்தது.

மறுபடியும் பிற்பகல் 4-மணிக்குச் சைவர் மாநாடு தொடங்கியது. அமெரிக்க விஸ் கான்சின் பல்கலைக்கழக மாணவர் திரு. டேவிட்ஜெசிஷாவர் என்பவர் "சைவ சித்தாந்தத்தில் கடவுட் கொள்கை" (Conception of god in Saiva Siddhanta) என்னும்பொருள் பற்றி ஆங்கிலத் தில் பேசினர். மேலும் தாம் ஆங்கில சித்தாந்த இதழுக்கு ஆயுள் உறுப்பினராவதற்கு ரூ. 250-00 கொடுப்பதாகவும் வாக்களித்தார். அன்னரின் ஆர்வத்தைப் பாராட்டித் தலைவர் அவர்கள் பேசி அவரை வாழ்த்தினார்கள்.

அவ்வமயம் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா அவர்களும், அறநிலையத்துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார் பி. ஏ., பி. எல்., ஐ. ஏ. எஸ்., அவர்களும் வருகை புரிந்தார்கள், கச்சபேசர்

தேவஸ்தானத்தினர் அவர்களுக்குப் பூரண கும்பமரியாதைகள் செய்து, சிறந்த வழிபாடும் செய்து தந்தனர்.

மாநாட்டுப்பந்தலில் சைவ இளைஞர் மாநாடு மகாவித்துவான்-திரு. அருணைவடிவேலு முதலியார் அவர்களின் தலைமையில் கூடியது. இறைவணக்கத்தின்பின் திரு. வச்சிரவேலு முதலியார் அவர்கள் தமது வரவேற்புரையை நிகழ்த்தினார்கள். மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் தொடக்க உரை யாற்றினார்கள். ஆன்மீக வளர்ச்சியும், மக்கள் நல்வாழ்வும் தான் உலக சமயங்களின் குறிக்கோள் என்றும், மக்கள் தொண்டே கடவுள் தொண்டு என்றும், கோயில் சொத்துக்களை அறங்காவலர்கள் நன்கு பாதுகாக்க வேண்டுமென்றும், அவற்றை வீண்செலவு செய்யக்கூடாதென்றும், கோயில் வழிபாட்டுக்கு வருவோருக்கு நல்ல வசதிகள் செய்துதர வேண்டுமென்றும் கூறினார்கள். அறநிலையத்துறை ஆணையர் திரு. K. S. நரசிம்ம முதலியார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநாடு நல்ல முறையில் நடப்பதற்கு இறைவன் திருவருள் பாலிக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். சைவ இளைஞர் மாநாட்டுத் தலைவர் மகாவித்துவான் திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள் தங்களுடைய தலைமைப் பேருரையை யாற்றினார்கள். திருவாளர்கள்—வே. மு. பிரமேச முதலியார், மா. வெங்கடேசன், வித்துவான்—அம்பை இரா. சங்கரனார், வித்துவான்—பு. மா. ஜயசெந்தில் நாதன். ஔவை. து. நடராசன் எம். ஏ., எம். லிட்., முதலியவர்கள் முறையே "விநாயகர் மாண்பு", "திருவருட்பயன்", "திருமூலர் சொல்", "சாக்கிய நாயனார்", "அருள் நெறி", என்னும் பொருள்கள் பற்றிச் சிறந்த சொற்பொழிவுகளை யாற்றினார்கள். தலைவர் அவர்கள் கருத்துரை பகர்ந்தார்கள். திரு. வச்சிரவேலு முதலியார் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். திரு. கொ. நீ. சிங்காரவேல் முதலியார் அவர்கள் சமாஜத்தின் சார்பில் வரவேற்புக் குழுவினருக்கும் மற்றும் யாவருக்கும் நன்றி கூறினார்கள். பின்னர்

10 மணிக்கு திரு. வே. சுந்தரமூர்த்தி பாரதியார் அவர்கள் பக்கவாத்தியங்களுடன் "மெய்கண்டார்" பற்றிக் கதாகாலட்சேபம் நடத்தினர்கள். இரவு ஒரு மணிக்கு இரண்டாம் நாள், நிகழ்ச்சிகள் இனிது நிறைவேறின.

வரவேற்புக் குழுவினர் வெளியூரிலிருந்து வந்த அன்பர்களுக்குத் தங்குவதற்கு இராசகோபால் கலியாண மண்டபத்தில் இடவசதி செய்து கொடுத்தும், உண்டி நாலுவிதத்தில் ஆறுசுவைத்திறத்துடன் ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உணவளித்தும், மற்றும் எல்லா வகைகளிலும் தக்க ஏற்பாடுகள் செய்தமைத்திருந்தது மிகவும் பாராட்டத் தக்கது. மாநாட்டுப் பந்தரும் மிகவும் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இரண்டு நாட்களிலும் உள்ளூர் வெளியூர் மக்கள் திரளாக வந்து சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தனர். இவ்வாண்டு சமாஜ விழா சிறந்த முறையில் இனிது நிறைவேறியதற்காக இறைவன் திருவடிகளை வாழ்த்தி வணங்கி வழிபடுவோமாக.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்".

அறிக்கை

நம் சமாஜப் பதிப்பாக திருவாசகம் அண்மையில் வெளி வந்துள்ளது யாவருக்கும் தெரியும். மிகவும் அரிதின் முயன்று திருத்தமான பதிப்பாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 1--00 விலைவைத்திருந்ததை அண்மையில் 0--75 ஆகவும் குறைத்துள்ளோம். ஆகவே அவ்வவ்வூரிலுள்ள நம் சமாஜ அன்பர்கள் திருவாசகத்தினை நிறைய வாங்கிப் பரிசாகக் கொடுக்கவோ தக்காருக்குக் கிடைக்கச் செய்யவோ ஒல்லும் வகையான் பணியாற்ற வேண்டுகின்றோம். ஒன்பதாந்திருமுறையும் கிடைக்கும் விலை ரூ. 1–00 உடனே படிகளுக்கு உங்கள் பதிலை அனுப்புவீர்களாக. முன்பணம் அனுப்பிவைக்க வேண்டும். இல்லையேல் தக்கார் மூலம் நேரில் வந்து வாங்கிக்கொள்ளவும். (அம்பை)

உ

சிவமயம்

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

64ஆம் ஆண்டு விழா, காஞ்சிபுரம்

சென்னை அரசாங்க முன்னாள் துணைச் செயலாளர்,
முன் முதலமைச்சர் தனி ஆலோசகர்

ராவ்சாயிப் திரு. நல். முருகேச முதலியார் அவர்கள்

28—12—1969-ல் நிகழ்த்திய

தலைமைப் பேருரை

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

கருவார்க்கச்சித் திருவேகம்பத்
தொருவாவென்ன மருவாவினையே.

பெரியோர்களே !

மங்கலத்தமிழ்ப் புவிக்கு வாண்முகமெனத்தகும் துங்கமிக்க கீர்த்தி பெற்றது தொண்டைநாடு. நன்மை நீடிய நடுநிலை யொழுக்கத்து நயந்த தன்மை மேவிய தலைமைசால் பெருங்குடி தழைப்ப, தொன்மை மேன்மை யுடையது. தமிழிலக்கண வரம்பிற்கு எடுத்துக்காட்

டாக நானிலப்பகுதிகளையும் நிறையப் பெற்றது. தீய வென்பன கனவிலும் நினைவிலா சிந்தைத் தூய மாந்தர் வாழ் நாடு. இப்பெருந் திருநாட்டிடை என்றும் மெய் வளந்தரு சிறப்பினல் உலகெலாம் ஏத்தும் கைவிளங்கிய தலம் காஞ்சிமா நகரம். ஏயுமாறு பல்லுயிர்களுக்கு எல்லையில் கருணைத் தாயனுள் தனியாயின தலைவரைத் தழுவ, ஆயு நான்மறை போற்ற நின்று அருந்தவம் புரிந்த இப்பதியில், அடியேன் தலைமையுரையாக இம்மா நாட்டில் சிந்திக்கத்தக்க பொருள் நாமெல்லாம் உய்ய அம்மையார் புரிந்த தவத்தின் மாண்பும் சிவபூசனையின் சிறப்புமாகும். இம்மான்மியத்தை எம் தெய்வச் சேக்கிழாரும் மாதவச் சிவஞான முனிவரும் எடுத்தோதியதை சிந்தித்தலே நம் கடனுகும். சைவ சித்தாந்த இலக்கணத்துக்கு இலக்கியம் அருளிய சேக்கிழாரும் சிவ ஞானமாபாடியம் வரைந்த சிவஞான சுவாமிகளும் பெரியபுராணத்திலும் காஞ்சிப்புராணத்திலும் தழுவக் குழைந்த படலத்தின் மெய்ப்பொருளை எம்மனோர் உய்ய எடுத்துரைத்துள்ளனர். இவை சைவ சித்தாந்தத்தின் உட்பொருளையும்ஆகமவிதியால் செய்யத்தகும் சிவபூசனை யின் முறைமையையும் பயனையும் நனிவிளக்குகின்றன. உயிர்களின் பொருட்டு உலகீன்ற அம்மையார் அறம் வளர்த்தும், தவமும் பூசையும் புரிந்தும், திருக்காமக் கோட்டத்தில் நித்தியமாக எழுந்தருளி யிருக்கும் கருணைத் திறனைக், கண்டும் சிந்தித்தும் வழிபட்டும் உய்வது நம் கடனுகும். அறமும் தவமுமின்றி சிவபூசனை செய்து காண்பார் மெச்ச அகமகிழ்வது கூடாவொழுக்கமும் தீநெறியுமாகும். மகவின் நோய் தீர்தற்பொருட்டுத் தாய் மருந்துண்ணுதல்போல் உயிர்கள் யாவையும் சிவனை அறிந்து பூசித்து உய்யும் பொருட்டு உலகீன்ற அம்மை யார் இறைவர்பால் ஆகமங்களை எல்லாம் கேட்டருளி

அவற்றில் விதித்தபடி அறம் வளர்த்து, தவம் புனைந்து, சிவலிங்கத் திருமேனிகண்டு விதிவழியே சிவபூசனை செய்து, கம்பாநதி வெள்ளம்வர தழுவக்குழைய, இறைவர் "நின்பூசனை என்றும் முடிவதில்லை நம்பாலென" அன்பால் அருள, அத்தகைமைத்தே மாறிலாத இப் பூசனை என்றும் மன்ன மகிழ்ந்து கொண்டருளி, ஈறிலா காஞ்சியில் எல்லா அறமும் செய்ய அருள் வேண்டி வரம் பெற்றாள். சிவபூசனையே ஞானத்தின் உச்சியும் சிவ போகத்துக்கு சாதனமுமாக விளங்குவதை சிந்தித்தலே காஞ்சிமாநாட்டில் நாம் செய் தவமாகும். அவ்வழி ஞானக்கிரியா மார்க்கங்களைக் குன்றைக் குலபதியும், துறைசை மாதவனும் திருமுறைகளையும் ஆகமசாத்திரங் களையும் நன்குணர்ந்து கூறியபடி ஒருங்கே உணரற்பால தாகும். எனவே அப்பொருள் பற்றியே இத்தலைமையுரை சிறப்பாக அமையும்.

II

சமயங்கள் ஓராறும் மகிழ்ச்சிகூர உலகெங்கணும் சைவம் வளர்ந்து மன்னவும், எவ்வெத்தவத்துஞ் சிவ பூசனை ஏற்றம் என்ன பௌவத்து மேலோர் தேறி உய்ய வும், முப்பத்திரண்டறங்கள் வாழவும், எவ்வுலகத் தொளியும் தம் பெருமானார் தம் வழுவா விழிகளின் ஒளி நிறைவே என யாவரும் உணரவும், உலகீன்ற உமாதேவி யார் ஒரு சமயம் காதலால் செம்மல் பிறைவேணியர் திருக்கண் புதைத்து விளையாடினார். இறைவரின் இரு சுடர் மறைந்தவாற்றால் புவனம் இருண்டது, படைப்பு இறந்தது. வேள்விச்செய்கைகள் பறந்தன, தவந் தானங்கள் பறைந்தன, கடவுட்பூசை துறந்தன. தேவரும், முனிவரும், மக்களும் பேரிருளில் மூழ்கி, ஆவா வென்ன முறையிட, அம்மையார் கரங்கள் நீப்ப. ஐயர்

மலர் விழித்தார். படைப்பும் காப்பும் வயங்கின, அறத்தின் ஈட்டம் பல்கின. வேள்வி எங்கும் பரந்தன. உயிர்கள் எல்லாம் பொலிந்தன. படைப்பாதிச் செய்கை மாறி உருகெழுதீமை முன் உற்றதால், மருமலர் குழலி தீர்வு இயற்றல் வேண்டுமென இறைவர் விதித்தார். இகப்பருங் கருணைபூண்ட இறைவிக்கும் தமக்கும் பாவம் அணுகுவதில்லையேனும், எல்லாக்கருமமும் மரபினால் தாம் நிகழ்த்தியவாறே உலகங்கண்டு நிகழ்த்திடுமாதலினாலே 'நீ இதைச் செய்தி' என அருளினர் அமலர். அம்மையார் வள்ளலை நோக்கி, கழுவாய் செய்வகை யாதென்று வினவ, நம்பனார் எத்தனை வன்மையான அறக்கடைச் செயலும் முற்றும் இறச்செய்யும் சீர்க்கழுவாய் அன்பின் அர்ச்சித்தல், சித்தம் ஒருக்கி நினைத்தல், பழிச்சுதல், பேர் செப்பல், பத்தியால் அடியார் வழிபாடு செய்தல் என அருளினர். ஆளுடைநாயகியும் அவரவர் பொன்றும் உணர்ச்சியின் அருச்சனையை எளிவந்து புரைவல்லீராதலினால் நானும் மகிழ்ந்து அர்ச்சனை செய்யும் நலம் பெற்றேன். ஊனமில் பூசனை செய்திறம் எத்திறம் என்று வினவ நித்தியம், நைமித்தியம், காமியம் என்ற மூன்றும் மண்ணுலகில் செய்யத்தக்கது. எனவே, எமக்கான உத்தமவைப்பில் எம்மை விதிப்படி இலிங்கத்தில் மூதுலகெல்லாம் மெய்ச்சித்தி பெறும்படி அருச்சனை செய்கிற்பாய் என அருளினர். பெருமானே! நீ மகிழ்ந்துறையும் நற்றலம் யாது என அம்மையார் கேட்க, காசி காஞ்சி என்பனவுள் அறிவின் மிக்கார் ஆயின், காஞ்சி சால நமக்கினியது. இருள்மலத்தின் இருவினையால் பிணிப்புண்டு மருளில் மூழ்கி உய்வண்ணம் அறியாத பசுக்கள் அம்மலத்தின் உருவண்ணம் இயல்பாகப் பாசங்கள் நீங்கிய யாம் விடுவித்தல் நம் மெய்வண்ணப் பெருங்கருணை இயல்பாகும். அச்சங்கல்பத்தின்வழி பராசத்தி, திரோ

தானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி என ஐவகைசத்திகளை வகுத்து சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் அருவடிவங்கள் நான்கையும், சதாசிவன் என்ற அருவுருவம் ஒன்றையும் மகேசுரன், உருத்திரன், திருமால், பிரமன் என உருவங்கள் நான்கும், ஆக ஒன்பான் திருமேனி தோற்றுவித்து, தோற்ற முதல் ஐந் தொழிலும் செய்வான் உன்னி சத்தாசுத்தம் என்று இரு வேறு மாயைகளினின்றும் உடல் கருவி இடம் அனைத்தும் உயிர்கட்கு ஈந்து, அந்தக்கரணங்களின் வேறுபாட்டால் எய்தும் இருவினைக்குரிய பிறவி கூட்டி பள்ளநீர் ஊசல் போல கொட்புறுத்து பருவம் நோக்கி மெள்ள வினைப் பயன் ஊட்டி நஞ்சொடு சுவை அமிழ்தும் விரவி தீற்றி தெள்ளு தவத்தை அறிந்தும் அறியாதபடியும் உபாயம் உண்மை என்ற இருவகையாலும் உயிர்களைநல்வினைகளில் சேர்விப்போம். இரிய மனத்துகளறுத்து நம்மைக் காட்டும் அருந்தவங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காம். அவற்றிற்கு உரிமை தரும் உயர் தீக்கை சமயம், விசேடம், நிர்வாணம் என்ற மூன்றும். அவை குற்றமற்ற சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்திப் பதங்கட்கு உதவும். சட்சு (நோக்கு), பரிசம் (ஊறு),வாசகம் (மொழி), மானதம் (எண்ணம்),சாத்திரம் (நூல்), யோகம், ஔத்திரி என்ற ஏழனுள், மிக்கூறும் ஔத்திரி ஞானம், கிரியை என இருபாலாய், சமயம், விசேடம், நிர்வாணம் என்ற முப்பாற் கூறாக அமையும். மதியால் மிக்கோர் தெருளுதவு சைவ நெறியில் புகலப் பெறும் சமய தீக்கைக்கு உரியராவர். சமய தீக்கை பெற்றோர். திருக்கோயிலில் அலகிடுதல் முதலிய சிவனடி யார் பணித்த பணி தலைநின்று தாத நெறியான சரியை புரிந்து சாலோகம் பெறுவர். சரியை முற்ற முடித்து மகநெறிக்காம் விசேட தீக்கை எய்தி பூசைக்குரிய மலர்

முதலியன கொண்டு, நிலமுதல் சத்தி தத்துவம் ஈருக அமைந்த தாமரைமேல் ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான் தம்மைப் பாவித்து ஆவாகித்து ஆவரண பூசை செய்வர். அவர் சாமீபம் அடைவர். கிரியை முற்றியபின் இயமம் நியமம் முதலிய எட்டுறுப்பின் இயல்பு வாய்ந்து, இடகலை பிங்கலை என்ற பக்கவளியை அடக்கி, சுழுமுனை என்ற நடு நாடியை நிறுத்தி ஆருதாரங்களில் கணபதி முதலாம் தெய்வத் திருவருள் உணர்ந்து ஏகி சந்திரமண்டலத்தில் அமுதுண்டு உட்சோதியில் புக்கழுந்தி சகமார்க்க யோகுழப்போர் சாரூபம் எய்துவர். முறையானே சரியை யோகம் இவை முற்றி, அருள்பதிந்து (சத்திநிபாதம்) வினை ஒப்பு வாய்ந்து (இருவினை ஒப்பு) நிறைவான பருவத்தில் உயிர்க்குயிராய் நின்றருளும் சிவமே குருவடிவில் வெளிப்பட்டு மறைவாய்மை நிருவாண விதியில் ஆறு அத்துவாக்களைச் சுத்தி செய்து குறையாத பேரருளின் வழிநிற்கும் ஐந்தெழுத்தின் கொள்கையைத் தெளிவிப் போம், என்று ஐயர் அருளினர்.

அருவம் உருவம், குறி குணங்கள், முதல் ஈறு, கட்டு வீடு அனைத்தும் இன்றி, நுண்ணியதாய், பேருணர்வாய், ஆனந்தப் பிழம்பாய், ஒரு முதலாய், ஓங்கொளியாய், எங்கும் நிறைந்துள்ளதாய், உயிர்கள்தோறும் ஒன்ருயும் வேருயும் உடனுயும் விரவித் தொழில்படுத்தி, அவ்வுயிர் களின் புலங்கொளுத்தி முத்தியில் செலுத்துவது பதி யாம். நல் பசுக்களோ எண்ணிலவாய், ஒன்று இரண்டு மூன்று மலமுடைமையால் சகலர், பிரளயாகலர் விஞ் ஞானகலர் என்ற மூவகையராய், பளிங்குபோல் பற்றி யவை தாமாய் எக்காலத்தும் உள்பொருளாய், சத்த சத்தைப் பகுத்துணரும் சத்துப் பொருளாய், இருளும் ஒளியும்அல்லாத கண்ணியல்பாய், வசிப்பவருநிறைவாய் ஏக தேசியாய், எம் அருளால் தனை நீங்கி மோட்

சத்தை நண்ணுபவாய் உணர்த்த உணரும் சிற்றறிவுடையன. மலங்களில் ஆணவமலம் ஒன்ருகி, அழிவின்றிப் பல ஆற்றல்கள் உடையதாய் செம்புறும் மாசென்ன எப்போதும் ஒன்றில் நிலவி, திருவருள் விளைவில் வலிகெட தனுகரண புவன போகங்களை நல்கும் இருவகையாம் சுத்த மாயையையும் அசுத்த மாயையையும், இருவினைகட்குக் காரணமான மூலகன்மமும், இவற்றைத் தொழிற்படுத்தும் திரோதமலமும், பஞ்சமலங்களாம்.

சவிகற்பம் நிர்விகற்பம் என்பவை அகன்று உண்மை இயல்பை எண்ணி, தெளிந்துதேறும் பெறலரிய சன்மார்க்க ஞானநிலை பெற்ரேர் ஆணவ மலக் கட்டை நீங்கி, சிவானந்தப் பெரும்பேறு பொருந்தி, இனி பாசம் இரிவதூஉம் புகுவதூஉம் இன்றி ஓர் நிலையான இயல்பில் மன்னி, உணர்பொருளும் உணர்வானும் உணர்வுமெனும் பகுப் பொழியாது ஒழிந்து, கண்ணும் அருக்கன் ஒளி போலும், நீரும் அதனிடை நிழலும் போலவும், தீயும் பற்றப்பட்ட இரும்பு போலவும், நீரும் கலந்த உப்பு போலவும், பரிதியும் ஒளிமங்கிய விண்மீன்கள் போலும் ஒப்ப இரண்டற்ற கலப்பினைல் போல, ஒரு நிலை பெற்ற உயிர்கள் எம்முடனுய் பேரின்பம் துய்த்து வாழ்வார். அம்மையே அவர் வடிவே எமக்கினிய கோயிலாம், முத்தியின் முடிவு இது வென்றறி. முன் சொலின் மூன்றும் பதமுத்திகளாகும். மேற் கூறிய சாதனங்களால் முயன்றவரே இம்முத்திகளை அடைதற்குரியவர். அத்தகைய வலியில்லோர் எளிதாக வீடு பேறடைவான் எண்ணி, வைத்த பெருங்கருணையினல் மேதினியில் பல தலங்களில் நாம் எழுந்தருளிவிளங்கச் செய்தோம்.அத்தகைய தலங்களில் காசியில் வைகுவோர் எம்முடைய சாருபத்தைப் பெறுவர். காஞ்சியில் வைகுவோர் மங்கரிய மலந்துமித்து நம்முடனும் பேரின்ப வாழ்வு சேர்வர் (சாயுச்சியம் பெறு

வர்). எம் முலகத்தில் உறைவதைவிட எம் அண்மையில் இருத்தல் ஏற்றமாகும். அதனினும் ஏற்றம் எம் உரு பெறுதல். அதனினும் ஏற்றம் எம்முடனுய் ஒற்றித்தல், எனவே காஞ்சி எவற்றினும் அதிகமென உணர்வாய். வேதங்களெல்லாம் "வீடுதவும் வளநகரம் காஞ்சி" என்று கூறும். எனவே அத்தலம் எய்தி கழுவாய் ஆற்று வாய் என்று அம்மையாருக்கு இறைவன் அருளிச் செய்தார்.

III

அம்மையார் நம்பனுர் தம்மைக் கயிலையில் இன்ப நகையிடைத் தணக்கும் வருத்தமும், திருவேகம்பரை பூசனை புரியவரும் காதலும் இருபால் ஈர்ப்ப பிரிவாற் ருமையால் பலமுறை விடைகொண்டு காஞ்சிமா நகர் சேர்ந்தார். விழுப்புகழ் கம்பத்தலைவரை விதியால் அருச்சனை புரிய பரிவெய்தினுள்.

அம்மையார் நாயனுரைப் பிரிந்த வருத்தம் ஒரு பாலும் திருவேகம்ப நாதரை பூசனை புரிய எழுந்த பெருவிருப்பு ஒருபாலும் நிகழ, திருவேகம்பம் அடைவது கண்ட தேவாதி தேவர்களும் அங்கு வந்து கூடினர். பூவுலகத்திலும் அம்மை கம்பவாணரைப் பூசை செய் கருத்தின் வந்தாளென நம்மினேங்களும் வீடுபேறு நண்ணுகாலம் ஈதென மகிழ்ந்தார்கள். பெண்ணின் நல்லாள் கச்சியேகம்பம் அடைந்து கங்கணமும் கடக மும் பூண்டு பரவெளியாகிய பீடத்தைப் பைம்புனலில் படிந்து பன்னுள் மெய்த்தவம் மேற்கொண்டு இருத்த லால் கம்பனுர் கருணைகூர்ந்து வந்தருளினர்.

அம்மையார் காஞ்சியில் தவந் தொடங்குமுன் அறம் வளர்த்தார். தெய்வம், தென் புலத்தோர், பூதம், மானுடம், பிரமம் என்ற ஐவகை வேள்விகள், வறியார்க்கு

ஈகை, துறந்தவர்க்கு மடம், இல்வாழ்வார்க்கு இடம், மனைக்கு உபகரணங்கள், தண்ணீர்ப்பந்தர், சோலைகள், இறப்பவர், குருடர், அங்கம் குறைந்தவர் ஆகிய இவர்களுக்கு உதவி, வெங்நோய் துரக்கும் நன்மருந்து ஈதல், நல்வாய்க்குழவி வளர்த்தல், பூ, கோ முதலிய தானங்கள், மணம் புரிவித்தல், விளக்களித்தல், தீராக்கடனைத் தீர்த்துபகரித்தல், சிவனடியார்க்கு வேண்டுவ கொடுத்தல், அக்கமணியும் வெண்ணீறும் கொடுத்தல். சிவ பூசைக்குரிய உபகரணங்கள் கொடுத்தல், வேதாகம சிவபுராணங்கள் ஓதுவித்தல் சிவபக்தியை வளர்க்கச் செவியறிவுறுத்தல், வேண்டும் வேண்டுவார்க்கு அபயம் வழங்குதல் என்ற நவை தீர்ந்த முப்பத்திரண்டு அறங்களையும் நாடோறும் நடாத்தி பவநெறி துலங்கும் ஞானப்பைந் தொடியார் நிறுவினர்.

கம்பாநதிக் கரைமிசை வேதமாமரத்தின்நிழலில் ஓங்கொளிப் பொருளைக் காணும் காதலினால் அங்கு சேர்வதற்குமுன் அம்மையார் அந்நகரிலுள்ள பல திருக்கோயில்களைக் கண்டு தரிசித்தார். முன்னொருநாள் மகாவிஷ்ணு திருக்கூத்தின் திருக்கருணையைச் சிந்தித்து சிவயோகத்தினால் தம் கவிழ்ந்த கமல இருதயத்தை அலர்ந்து மேல் நோக்குறச் செய்ய தகராகாசத்தில் மெய்ப் பரப்பிரம்மம் சதாசிவப் புத்தேள் வீற்றிருப்பதைக் கண்டனன். திருமாலின் அன்புக்கெளியராகிய சிவனார் அவர் இருதய தாமரையிலே ஆனந்தத் திருநடம் இயற்ற ஆணவ இருள் சிறிதும் இல்லையாய் ஒழிந்ததைக் காண நெக்குருகினர். தளர்வில் ஆர்வத்தால் தன்னை மறந்து அறிதுயில் கொண்டார். இலக்குமியும் ஆதிசேடனும் கருடனும் அது அறியாது பயப்பட, முராரி தாம் கண்ட காட்சியை அவர்களுக்குக்கூறி அவர்களும் அதைக்காண விரும்பத் தில்லையில் காண்பித்தருளினர். அத்திரு

நடனத்தை சதாகாலம் தரிசிக்க வேண்ட மறன் இல்லா காஞ்சியில் தம் இலிங்கத்தைத் தாபித்து வழிபடு வாயாக என அருளினர். இதுபோல் அகத்தியரும் காஞ்சியில் வழிபட்டுப் பேறு பெற்ருர். இத்திருக் கோயில்களை எல்லாம் அம்மையார் கண்டபின் தாம் ஒரு மணிமண்டபம் இயற்றித் தம் தோழியர்க்குப் பூசைக்கு வேண்டிய பல பணிகளைச் செய்ய ஆணை யிட்டார். ஆடலான் விழி புதைத்தபின் ஆரிருள் படலம் உலகெங்கும் மூள அதனுல் கூடிய வல்வினைகளைக் கழுவி காஞ்சியில் தம்மை நீட அருச்சனை செய் என இறைவன் விதித்தமையும் மன்னுயிர்த் தொகைபோல் மாயையின் மறைப்பால் இருவினை விலங்கில் கட்டுண்ணும் பிணி தம்மையும் தம் அடியார்களையும் பற்றுவதில்லையாயினும், பல்லுயிர்கள் கடைத்தேறும் பொருட்டுத் தாம் சோலை செல்வதையும் தோழியர்க்கு அறிவித்தார். தோழியர்கள் அரும்புனல், மலர், பச்சிலை, வில்வம், சந்தனம் கஸ்தூரி, கருப்பூரம், குங்குமம், தெய்வமணிகள், பரிவட்டம் ஆகிய உபகரணங்களைக் கொண்டு வருவார்கள். சிலர் ஆனின் ஐந்து, ஐவேறு அமுதம் கொண்டு சேர்ப்பர். சிலர் மல ராலும் மணியாலும் பட்டாலும் விதானம் அமைப்பர். ஒருவரினும் ஒருவர் நான்முன் நீமுன் என முறுகிப் பணி செய்வார்கள். செம்பொன் குடங்களில் தெய்வமந்திரம் ஓதி, தீர்த்தம் கொண்டு வருவார்கள். திருமுழுக்கு நீரில் நறும்பூ ஏலாதிகளையும் சேர்த்து வைப்பார்கள். பல வகைக்கனிகளும் பால் தேன் நெய் கருப்பஞ்சாறு சந்தனக் குழம்பு முதலியவைகளைச் சேர்த்து வைப் பார்கள். பட்டாடைகள் ஆபரணங்கள் கொணர்ந்து தரு வார்கள் ஒரு குழுவினர். கண்ணுடி, வெண்சாமரை, ஆல வட்டம், புண்ணிய நீறு, பந்தம், குங்குலியம், மணிக் குடம், தட்டொடு தீபாராதனைக்கு வகுத்த உறுப்புக்கள், தீபம், மாணிக்க விளக்கு கைவகுத்து விளங்கச் செய்வார்

கள் ஒரு பாலார். மாடகம்,பங்கர், யாழ் முதலியவைகளைச் சுருதிகூட்டி பற்பல இயங்களில் இசை எழுப்புவர்,ஆடுவர், நடமிடுவர் ஒருபாலார். இப்படி சேடிமார்கள் பணிசெய்ய கன்னி வடிவில் திகழும் அம்மையார் நீராடிப் பட்டாடையுடுத்தி, திருநீறு முப்புண்டரமாகப் பூசி, கண்டிகை நேசமுற்றணிந்து, செய்நியமம் முடித்து, சிவபூசனை புரியும் காதலால் இரண்டாம் ஆவரணத்தை அணுகுவார். சங்கம் தாரை காளம் சின்னம் குழல் வீணை பேரிகை முரசு தம்பட்டம் கடல்மடல் திறந்தாற்போல் முழங்கும். கின்னரர் கருடர் கிம்புருடர் பாடி ஆட, துன்னிய முனிவரும் தூமறை வேதியரும் வேதம் முழங்குவர். பஞ்சப்பிரம மந்திரங்களும் சடங்க மந்திரங்களும் அடங்கிய பிரணவ ஸ்வரூபியாகிய விநாயகக்கடவுளையும் கடம்பணி கோவையும் நிறுதி திக்கிலும் உலவை திக்கிலும் பூசனை புரிந்து, நந்தியெம்பெருமானைத் திருவாயிலில் நணுகி, துவாரபாலகர் பூசனை முடித்து, மறைத்தனி மாவின் நீழல் வாழ் நாயனாரை விழிநயப்பக் காணக் காதலால் அம்மையார் வீழ்ந்தெழுவார். ஒருங்கிய மனத்தில் ஐந்தெழுத்தோதி, சிரமேல் கை குவித்து பெருங்களிதுளும்பி உள் புகுந்து பிஞ்ஞகர் மருங்கில் முறை முறை வணங்கி ஏத்துவார். மாவடி முளைத்த தீஞ்சுவை அருள்விளை அமுதினைக் கண்கள் ஆரப்பருகிப் பன்முறை போற்றி அண்ணலார் திருவருளையே உளங்கொண்டு களிப்பில் நீடு திளைப்பார். விழிகளின் ஆனந்த நீர் மெய்யெலாம் பொழியும். புளகாங்கிதமாய் நாக்குழற அறிவின் முற்றியபணியான பூசனையைத் தொடங்குவார். முதலில் ஊறுநீக்கி முழுதருள்பெற சங்கற்பம் செய்வார். பின் பிருதிவி முதல் பூத சுத்தியைச் செய்து அகப் பூசை (அந்தரியாகம்) புரிந்து, காமருமலரும் வாசவருக்கமும் கலந்த தெண்ணீர் கொண்டு, பாத்தியம் ஆசமனம், அருக்கியம் எனப்படும் திருவடிக்கழுவுநீர், பருகு

நீர், வாய் பூசுநீர் ஆகிய இவற்றைத் தூய்மை செய்து இறைவன் திருமுடி மேலுள்ள மலரை அகற்றி, பிருதிவி முதல் நாதம் ஈறுகிய தத்துவம் முப்பத்தாறினையும் ஆதனமாகக் கொண்டு அதன்மேல் வைகும் மூர்த்தி மூர்த்திமான் எனப்படும் சதாசிவ வடிவின் ஆன்ற சோதியை, திருவேகம்பச் சுடரினை நடு கீழ் பக்கம் முடி என்ற எவ்விடத்தும் நிறைந்து பொங்கும் ஆனந்த நிமல வாழ்வை மல இருளை அறுக்கும் மெய்யறிவால் தெளிவுற உணர்ந்து துதிசெய்து பாத்தியம் முதலாம் மூன்றினையும் பதம் முகம் முடி அவற்றிற்குரிய திருமந்திரத்துடன் வழங்கி, நெய் பாலொடு கூடிய மதுபருக்கத்தை மந்திர விதியால் நல்கி மீண்டும் அருக்கிய பாத்திய ஆசமனத்தை அளிப்பார். பின் நெய்யும் பாலும் பெய்த இனிய போனகத்தை வழங்கி,நெய் மா நெல்லி மஞ்சள் பஞ்சகௌவியம் பஞ்சாமிர்தம் பால் தயிர் நெய் தேன் இளநீர் இவைகளால் திருமுழுக்காட்டி, கருப்பஞ்சாறு பலவகைப் பழங்கள் சந்தனம் இவைகளாலும் ஆட்டிப்பின் தூய தெண்ணீரில் சீருத்திர மந்திரங்களை ஓதி, நுண்ணிய துகிலால் மெத்தென இலிங்கத் திருமேனியை உலர்த்திப் பின் பட்டாடை முப்புரிநூல் கஸ்தூரி கர்ப்பூரம் சந்தனம் மலர்த் தொடைகளைச் சாத்தி, நறு விரைத் தூபம் தீபம்காட்டி, நால்வகை உண்டிகளை நிவேதித்து மீண்டும் அருக்கியம் பாத்தியம் ஆசமனம் அளித்து, தாம் பூலம் மந்திரத்தொடு சமர்ப்பித்து, தூப தீபம் காட்டி ஆலத்திநீர் சுழற்றி, ஐந்தெழுத்தைக் கனிந்து முகிழ்ந்த பேரன்பினுல் ஆன்ற பூசனை அம்மையார் செய்வார்.

IV

இப் பூசனை முடிந்தபின் தன் பிலத்தில் அந்தமில் அறம் எண்ணுன்கையும் முறையே அருள்வழி வளர்ப்பார். இவ்வாறு பலநாள் பெருமாட்டி ஆகம பூசனையைப்

புரிந்து வாழ்வுறும் நாளில், ஒருநாள் முன்போல் கம்பா நதியில் நீராடி, உருத்திராக்கமும் வெண்ணீறும் அணிந்து அனுட்டானம் முடித்து பூசனையில் முனைந்து நின்று திருவேகம்பரை மஞ்சனம் ஆட்டும்போது, தனி மா நிழலில் நின்ற வள்ளலார் அளவிலா அன்பு பெருகிய கருத்துடைய அம்மையார்க்கு பேரருட் கருணை கூர்ந்த ஒரு திருவிளையாட்டாலே பத்திமை உறுதியை நோக்கித் திருவருள் புரிவான் வேண்டி அண்டத்துள்ளும் புறத்தினும் விரவும் தீர்த்தங்கள் எல்லாம் ஒருங்கு திரண்டு வர நினைத்தார். அக்கணமே, ஊழிக்காலத்து வெள்ளம் எழுவதுபோல் ஊறுகின்ற கம்பா நதியுடன் கலந்து எல்லாப் புனலும் கூடிப் பொழிந்தன. விண்ணவரும் மண்ணவரும் கடைநாள் அணுகிற்றோ என அஞ்சினர்கள். அபிசார யாகத்தில் கிளம்பிய யானைபோல் வெள்ளம் மேலும் கீழும் பாய்ந்தது. அம்மையார் கண்டு அஞ்சினர். பாங்கிமாரும் அம்மையாரின் சிவபூசனையின் இடையே காரணமின்றி நேர்ந்ததை எண்ணி வருந்தினர்கள். அம்மையார். "யான் செய்த பிழையால் பூசனைக்கு வந்த இடையூறு இதாகும்" என்று எண்ணி கவலைமிக்கு, சென்னியில் மதிவைத்தார் திருவடியை மனத்துள் கொள்ளுமுன்னர் அப்பெருநீர் வெள்ளம் முடுகிவந்தடுத்தது. மனங்கலங்கி வானளாவிப் போகும் இப்பெருநீர் எம்பிரான்மிசை நண்ணுமே, இனி செய்வதென்னோ! என்று தம்பிரான் மாட்டுப் பொங்கி எழும் உள்ளத்தோடு தன் பொன்மேனி வடிவெல்லாம் நடுக்கமுற நுதலில் குறுவெயர்வு அரும்ப, கொங்கைதுவள, சிற்றிடை தளர ஒரு பொற்கொடி வளர்ந்து மேருமலைச் சிகரத்தை இருமருங்கும் தழீஇக் கொண்டாற்போல விரைந்தெழுந்து தனது வலது முழங்காலை ஊன்றிக் கருமணிப்பாவையான அம்மையார் தம் கொழுநனைத் தழுவிக் கொண்டார். மணிமுலைக் குவட்டினோடு வளைக்

கையால் நெருக்கிப்புல்லி ஆராத காதல் விம்ம காதலி யார் தழுவ, திணி இருள் அறுக்கும் சோதித் திருவுருவம் குழைந்து காட்டி அணிவளைத் தழும்பினோடு முலைச் சுவட்டையும் ஐயர் அணிந்தார். முனிவர் குழாம் நனி வாடி அருந்தவம் முயற்சிக்கும், பன்மறை கற்றவர் உணர் வுக்கும் கடந்த பேரொளி, அம்மையார் வெள்வளைப் பொற்தழும்பும், முலைச்சுவடும் பூண்டது! உருவருவமும் அருவமும், அணுவும் அண்டமும், உண்மையும் இன்மை யும், இருளும் ஒளியும் அன்றி இவைகட்குவேறாய் இலங்கும் பேரொளி இவ்வாறு பூண்டது! ஆன்ம அறி வின்கண் ஒளிக்குள் ஒளியாய் நின்று உரு உயிர் முழு வதும் ஆட்டும் பேரொளி இவ்வாறு பூண்டது! உயிர்ப் பிணை ஒடுக்கி விழித்துறங்கி சாக்கிரத்தே அதீதத்தில் அகக்கண்ணால் நோக்கத்தகும் ஆரொளி இவ்வாறு பூண்டது! சகலகேவலத்துக்கு அதீதமான சுத்த நிலை யில் நின்றவர் தம் அன்பினுக்கு அணியாய நீள் ஒளி இவ் வாறு பூண்டது! மனத்திடைத் தனதிடை நினைத்த மாத் திரத்தில் வினையால் வரும் பிறவி வேரை அகழ்ந்தெரியும் மெய்யொளி இவ்வாறு பூண்டது! வால்வளைத் தழும் பொடு முலைச் சுவடணிந்த கம்ப வைப்பின் மாவின் மூலத்து முக்கண்ணனார் கருணை மேலீட்டினால் உவகை யில் பெருங்களி சிறத்தலும் உம்பர் இம்பரும் பல்லுயிரும் உவகையில் களித்தனர். எவ்வுலகமும் மயக்கந்தீர்ந்து உயர்ந்தன. கலந்த சிந்தையால் அம்மையப்பரின் திரு வருட் கருணையை எண்ணிப் புலந்தழைத்திட சென்னி மேல் அஞ்சலி புனைந்தார். மூவுலகமும் பெற்ற இன்பத் தைக் கொன்றைச் சென்னியாரன்றி மற்று யாவர் உணர வல்லார்!

மும்மூர்த்திகளாலும் அரிவரிய முதல்வர் அந்த வேளையில் இறைவியின் அணிவளைத் தழும்பும், சுத்த மென் முலைச்சுவடும் தோய்ந்த தனியுருப் பொலிவாய சுந்தரந் திகழ் சுடர் ஒளி இலிங்கத்தினின்றும் முந்து

தோன்றிக் காட்சி தந்தருளியனர். அப்படி நின்றவர் மாதினைத் தழீஇக்கொண்டு ஆன்ற காதலால் செய்ய வாய் முத்தம் உண்டு அருளினர். அம்மையை நோக்கி, "தோகை மஞ்ஞை அம்சாயலாய், உள்வெருவேல் நின் பூசனைக்கு உவகை யுற்றனம்" என்று உரைத்துத் தம் மணவாள நற்கோலம் காட்ட ஏகநாயகி நோக்கினுள் இணை விழி களிப்ப, தழுவிய கைகளை விடுத்து சென்னி மேல் குவித்து அஞ்சலி செய்தாள்!

"நெடியவன் பிரமன் காணு நின்மலக் கொழுந்தே போற்றி,
அடியனேற்கு பயம் நல்கும் அருட்பெருங் கடலே போற்றி,
படிமுதல் ஆறகி வேறுமாம் பானே போற்றி,
முறைமுறை உலகமெல்லாம் முகிழ்ந்தளித் தழிப்பாய் போற்றி,
மன்றில் ஐந்தொழில் நடித்தாய் போற்றி,
அஷ்ட மூர்த்தியாய் நின்ற பெரியோய் போற்றி,
முத்தீ விழியாய் போற்றி,
மறவியின் வழிபட்டோர்க்கு பொருளாய் போற்றி,
முன்னுறு பொருள்கட் கெல்லாம் முற்படு பழையாய் போற்றி,
பின்னுறு பொருள்கட் கெல்லாம் பிற்படு புதியாய் போற்றி,
பூரண முதலே போற்றி, சின்மயத் திருவே போற்றி,
திருவேகம்ப சிவசிவ போற்றி போற்றி!"

என்று போற்றினர். கொன்றைச் சடையார் பேரருள் கூர்ந்து துன்றிய கேண்மையினல், "அங்கணே! நின்னொடு நாம் வேறலம். ஆரமுதத் திங்களும் வெண்ணிலவும் போலத் திகழ்வோம். இலளிதை என்ற பேரோடு முன்னர் எம் வடிவினின்று பிரபஞ்சங்களை எல்லாம் ஈன்றாய். பின் ஒரு கற்பத்தில் மெய்ஞ்ஞான சத்தியாய்ப் பிரமனுக்குப் படைப்புத் தொழில் ஆற்றல் ஈந்து தக்கன் மகளாய் எம்மை மணந்தனை. இத் தருநீ, உலகம் யாவையும் உய்யு முறை மந்தரமலைமேல் யாம் அருளாற்றியபடி இப் பூசனையைப் புரிந்தாய், வேட்டது கூறுக" என அருளினர்.

அம்மையார், மந்தரமலை, திருக்கயிலை, சிவலோகம் என்ற மூன்றிலும் சிறப்பெய்தி எந்நாளும் மகிழ்விக்கும் இடம் இக்காஞ்சி. இவ்விடத்தில் பொருந்தி வாழ்வோர் யாவரும் முத்தியுறப் பணிவாய் என்று வேண்டினர். இறைவனும் "திருவடிப் பிழை நீங்கி ஏனை தீவினை யெலாம் சீர்வளர் காஞ்சியில் தேய்ந்து தவம் பெருகி உயிர்கள் மெய்திகழ் நாற்பயனும் மேவ நிறீஇனேம்" என அருள் பாலித்தார்.

V

இதுகாறும் கூறியவாற்றல் ஆகமவிதியால் செய்யப் பெறும் சிவபூசனையே தவமும் அருச்சனையுமாகும் என்று அம்மையார் செய்த பூசனையால் விளங்கும். எம்மாதவச் சிவஞான சுவாமிகள் சிவபூசனையின் தத்துவத்தையும் அதன் முறையையும் இனிது விளக்கிக் கூறினர். இனி, எம் தெய்வச் சேக்கிழார் கறை விளங்கிய கண்டர் காதல் செய்ம் முறைமை நிறைபுரிந்திட எப்படி அறம் புரிந்தார் என்று கூறியதைச் சிந்திப்பாம். ஆகமத் திறனெல்லாம் எடுத்துக்கூறி சிவபூசையைப் பற்றி ஐஞ்சீருடைய கலித் துறையிலும், எண்குணனாகிய அட்டமூர்த்தியை அம்மை பூசை செய்தமையை என்சீர் விருத்தத்தாலும், சரியை கிரியையாதி நாற்பாத நெறியில் நின்று பிறவி மாசைப் போக்கும் தகைமையை நாற்சீர் விருத்தமாகிய கொச்சக் கலிப்பாவினாலும் குன்றை நகர் குலபதி எடுத்தோதுவார். கயிலையில் துள்ளுவார் புனல்வேணியர் அருள்செய் தெள்ளுவாய்மையின் ஆகமத் திறனெல்லாம் தெரிய உள்ளவாறு உலகையாளுடைய உமையாள் கேட்டருளி உலகம் உய்ய பூசனையையும் தவத்திரு அம்மையார் இயற்றினர் என்பர் சேக்கிழார்.

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தர் முதலில் தம் ஐம்முகங்களினுல் ஈசான முகத்தில் எட்டும், தற்

புருடம் முதலிய நான்கினில் ஐயைந்தாக இருபதும் ஆக 28 ஆகமங்களை, சிவபேதம் பத்தை அணுசதாசிவருட் டலேவராகிய பிரணவர் முதல் முப்பத்தின்மருக்கும் உருத்திரபேதம் பதினெட்டை அநாதிருத்திரர் முதல் முப்பத்தறுவருக்கும் வெளிப்படுத்தினர். அம்மை யாருக்கு ஆகமத்திறனை நேரே வெளிப்படுத்தினர் சிவபெருமான். அதைக் கேட்டதன் பயனாக அம்மையார் இறைவர் விரும்புவது பூசனையேயாகும் எனத் தேறி அதைப் புரிய ஆதரித்தார்.

" எண்ணி லாகம மியம்பிய விறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை யெனவுரைத் தருள
அண்ண லார்தமை யருச்சனை புரியவா தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து."

நங்கை உள்ளத்தில் நிறைந்த காதலை நோக்கிய நாயகன் திருவுள்ளம் மகிழ்ந்து, "அடுத்தது என்கொல் நின்பால்" என வினவ, "நாத! நீ மொழிந்த ஆகமத்தின் இயல்பினால் உனை அருச்சனை புரியப் பொங்குகின்றதென்னுளை" என்றாள். பின் தழுவக் குழைந்ததை முன் கூட்டியே தெரிவிப்பான்போல் சேக்கிழார் ஈண்டு அம்மையாரைப் 'போகமார்த்த பூண்முலையினாள்' என்று தேவார ஆட்சி மொழியில் பேரிட்டுப் போற்றுவார்! அந்த பூசனை கயிலையில் புரியத் தகாதோவெனின் இல்லை. இறைவர் காஞ்சியில் மாவமர்ந்த தன் இருக்கையில் அணைந்து மன்னு பூசனை மகிழ்ந்து செய்வாய் என ஏவினர். ஏதமில் பல யோனி எண்பத்து நான்கு நூறாயிரந்தனுள் வைத்த உயிர் பேதங்களைப் புரிந்தருளும் கருணையினால் இறைவன் கூறியபடியே, சைவத்தின் முடிந்த உண்மையாவது சிவ பூசை என்பதை அம்மை காஞ்சியில் காட்டியருளினர். காஞ்சியில் பிலத்தினில் திருவிளையாட்டால் ஏகமாமுதல் எதிர்ப்படா தொழிய,

பொங்குமாதவம் செய்தனள் அம்மையார். நெஞ்சம் ஈசனையே காண்பதாக விரும்பி நிரந்தரம் திருவாக்கினில் அஞ்செழுத்துமே நிகழ்த்திச் செம்மலர் கைகுவித்து இறைஞ்சி தஞ்சமாகிய அருந்தவம் புரிய, இறைவன் வஞ்சம் நீக்கிய மாவின் மூலத்தின் தோன்றினர். வேறு திருமேனி கொள்ளாது சிவலிங்கத் திருமேனி கொண்டது ஆகம பூசனைக்காக வேண்டியே என்பதறிக. அம்மை யார் இது தம் பெருந்தவப்பயன் என மகிழ்ந்து குறித்த பூசனைக் கொள்கை மேற்கொண்டு தூய அர்ச்சனை தொடங்குதல் புரிவாள். தம் நாயகர் உரைத்த ஆகமத்து உண்மைப்படியே பூசனை புரிந்தாள். மலர் மஞ்சனம், மெய்ப்பூச்சு, தூபங்கள் கொண்டு, மெய்ம்மையான பூசனையை, உயிர்கள் யாவையும் ஈன்ற பெருமாட்டி செய்தாள்.

"காந்த நும்பய வீதுவென வுணர்ந்து
கம்ப மேவிய வும்பர் நாயகர்பா
லீர்ந்த காதல்செ யுள்ளந்த ளாகி
நீடு நன்மைக ளியாவையும் பெருக
வாந்த நும்பொரு ளாமலை வல்லி
மாறி லாவகை மலர்ந்தபே ரன்பாற்
சிரம்ப ணிந்தெழு பூசைநா டோறுந்
திருவு ளங்கொளப் பெருகிய தன்றே"

கரத்தால்இலிங்கத் திருமேனியைத் தீண்டிப் பூசனை செய்தல் கரந்தரும் பயனாகும். ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் 'கைத்தல மாலை'யில் இஷ்டலிங்கத்தைக் கைத்தலத்தில் வீற்றிருக்கச் செய்யும் பேற்றைப் போற்றிப் பத்துப் பாடல்களின் ஈற்றடிகளில் "என்ன மாதவஞ் செய்ததோ எனது கைத்தலமே!" எனப் பாடியருளியுள்ளார். கைகூப்பித் தொழுங் கையைவிடப் பூசனைசெய்கை பெருந்தவம் செய்ததாகும். நங்கை

இவ்வாறு அருச்சனை செய்யும் அப்பொழுதில் காதல் மிக்கதோர் திருவிளையாட்டால் அருள் புரிந்திடக் கம்பை நதி வெள்ளம் பெருகிடத் திருவுள்ளம் செய்தார். தம்மைத் தழுவ வேண்டும் என்ற காதலினால் செய்தது இத்திருவிளையாட்டாகும். பசுத் தொடர்களின் காதலோ டொத்த காதல் இதுவன்று. இது உயிர்கள் ஈடேறும் பொருட்டுப் பிரிந்த சத்தி தம்முடன் புரிந்து நிற்க வேண்டிய தத்துவ நிலையைக் குறிக்கும். மணிவாசகப் பெருந்தகையும்—

" உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடுங்காண்
[சாழலோ "

என்று ஓதியமையும் ஈண்டு நோக்குக, அம்மையார் பதைப்புறு காதலுடன் திருக்கையால் வெள்ளத்தைத் தடுத்தும் நில்லாமையால் தண்ணிலா மலர் வேணியி னாரைத் தழுவிக் கொண்டனள் தனக்குத் தன்னையே ஒப்பாள். முலைக்குவட்டொடு வளைக்கையால் நெருக்கி முருகு காதலால் இறுகத் தழுவ, திருவிளையாட்டை விரும்பிய கொள்கையினர், அம்மையார் திருமுலைக்கும் செந்தளிர்க்கரங்களுக்கும் மெத்தெனவே குழைந்து காட்டினர். அக்கணமே ஏழுவகை உயிர்களும், உயிரும் யாக்கையும் உருகி ஒன்றுகிப் போற்ற, கம்பை ஆறும் தலைவணங்கி வெள்ளம் தணிந்தது. ஊனும் உயிரும் உருகின் உணர்வு மேம்படும். (அம்மையார் கயிலையில் விளையாட்டாக ஐயரின் கண்புதைத்ததால் சிருட்டித் தொழில் தடைபட்டதை சேக்கிழார் குறிப்பிடவில்லை.) இப்போது அம்மை தழுவ அப்பன் குழைந்தது சராசரங் களெல்லாம் மீண்டும் ஊனும் உயிரும் கூடித் தொழில் படத் தொடங்க என்பது அறியற்பாலது. இறைவன் யோகத்திலிருந்தபோது, "வில்லாடன் மாரன் இருப்

பினும் யோகம் விளைந்த வந்நாட் புல்லா திருந்தன எல்லா உயிருந் தம் போகத்தையே" என்ற சான்றும் ஈண்டு நினைவு கொள்க. இறைவன் கலந்த யோகத்தின் மருவிய கருத்தால், அகில மீன்றளித்த மாது மெய்ப் பயன் கொடுப்பவே, வளைத்தழும்புடன் முலைச்சுவ டணிந்தார்.

"காமனை முனிந்து நெடுஞ்சடை தரித்து
கவின்ற கல்லாடை மேற்புனைந்து
யாமெலாம் வழுத்தும் துறவி என்றிருந்து
மொருத்திதன் இளமுலைச் சுவடு
தோழுறக் கொண்டார்எனச் சிறையிடல் போல்
சுடர்மனக் குகையுளே கம்பத்
தோமெனும் பொருளை அடக்கி ஆனந்த முறுவர்"

என எமது மாதவச் சிவஞான யோகிகள் நயமுறப் பாடுவார். சேக்கிழார் இதை 'கலந்த யோகம்' என்பர். சேக்கிழாரின் பொருட்செறிவையும் கவியழகையும் ஈண்டு நோக்குக. மெய்ப்பயன் என்பது திருமேனி தீண்டும் பயன்; அதனால் உயிர்கட்குச் செய்தது உண்மைத் திருவருள் என்றும் இருபொருள் அடங்கியதை நோக்கி மகிழ்க. ஸ்ரீ மாணிக்க வாசகப் பெருந்தகை முலைச் சுவடு படிந்த சீர்த்தியை இன்னும் நுட்பமாகக் கூறுவர்.—

"துடிகொணே ரிடையாள் சுரிகுழன் மடந்தை
துணைமுலைக் கண்கடோய் சுவடு
பொடிகொள வான்றழலிற் புள்ளி போலிரண்டு
பொங்கொளி தங்கு மார்பினனே"

என்பது 'அருட்பத்'தில் அருளிய திருவாக்கு. அம்மை யாரின் இரண்டு நகில்களின் கண்கள் பதிந்தன என்பர். இறைவன் திருமேனி வான்தழல், அதில் முலைச் சுவடு

எவ்வாறு பதியும் என வினவில் பொடிகொள் மேனியரா கியதால் சுவட்டை ஏற்றது. மணிவாசகர் இரண்டு தனங் களும் பதிந்தன எனக் குறிப்பிடுவதையும் கவனிக்க. இரண்டு தனங்கள் பரம்,அபரம் என்ற இருவகை ஞானங் கட்கு நிலையான தானங்கள். இந்த இரு ஞானங்களுடன் இறைவன் திருவருளால் சிவஞானமும் கலந்து நமது திருஞானசம்பந்தக் குழந்தைக்குப் பாலூட்டப்பட்டது. எனவே ஞான அருள் நிலையில் உமை பாகராகவே இறை வன் தோன்றி அருள் புரிகிறார். அப்பர் பெருமானும் திருவதிகை 'அடையாளத் திருத்தாண்டக'த்தில் இந்த தழும்பு சிலாசாசனத்தை உறுதி செய்துள்ளதை நோக் குக. இது "கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக் கோட்டி கொங்கையினை யமர்பொருது கோலங்கொண்ட தழும்புளவே" என்ற பாட்டால் நனி விளங்கும். வள்ளி நாயகியும் களிறு வந்து பயமுறுத்தியபோது,"இவ்வேழம் காத்தருள்க வெந்தைநீர் சொற்படி செய்வேனென" வொருபாற் சேர்ந்து தழுவிக்கொண்டனள். முருகப் பெருமான் ஒருசார் களிற்றின் கோடூன்ற பின்னொரு சார் பிடியின் மருப்பூன்ற இந்நடுவே வயிரத் தூண் போல் நின்றார். பின் முன்னான்கு தோளும் முகங்களா றும் மூவிரண்டுங், கொன்னார் கைவேலும் காட்டியபின் கோலக்குறத்தி தம்மை ஆண்டுகொள் என, செவ்வேள் குமரன் தானே "அம்மைதனைத் தழுவி ஐயன் அருள் புரிந்தான்". கிரியா சத்தியின் அம்சமான வள்ளியம்மைக் கும் அபின்னையான உமையம்மைக்கும் வித்தியாசம் இதுவே. அம்மையாரின் லிங்காங்க சையோகம் ஆதி அந்தம் இல்லாத மாட்சியை உன்னுக!

உயிர்களெல்லாம் வாழ உலகீன்ற அம்மைக்குச் சிவனார் மணவாள நற்கோலம் காட்டி, வேண்டிய வரம் யாது என அருளினர். அம்மையார், நீங்கிய பூசனை

முடிந்ததின்மை தெரிவிக்கும் பொருட்டு, "கொண்ட இற்றை என் பூசனை இன்னும் குறைநிரம்பிடக் கொள்க" என்று வேண்டினள். எந்த இடையூறு வரினும் சிவ பூசை முறைப்படி முடிப்பது சைவநீதி என்பதை உணர்ந்த அம்மையார் கலந்த பூசை நிலைத்து முற்றுப் பெறுவதையே மிக வேண்டினாள். இறைவன், "நின் பூசனை என்றும் முடிவதில்லை நம்பால்" என்றார். அதன் கருத்து, "நீயும் நானும் நித்தியர்கள். நீ பெற்றெடுத்த உயிர்களின் வாழ்வு கருதிப் பூசனை செய்கின்றாய். அந்த உயிர்களும் நித்தியர்கள். அவர்களின் பொருட்டு இப் பூசையின் பயனாய் நாமிருவரும் செய்யும் திருவருளும் நித்தியமாய் நிகழ்வது. ஆதலின் நின்பூசையும் முடிவில்லாது என்றைக்கும் நிகழத்தக்கது. எனவே அது குறைவு நிறைவற்றது, என்ற தத்துவத்தை ஈசன் விளக்கினன். எனவே அம்மை காஞ்சிப் பதியில் எல்லா அறங்களையும் செய்ய வரம் வேண்டினாள். இதனால் அறியத் தக்கது என்ன? தவத்தின் பயனாய் சிவபூசை புரியும் புண்ணியம் வாய்க்கும். சிவபூசையினால் இம்மையில் எல்லா அறங்களும் வளரும். உயிர்கள் சேர் நாற் பொருட்பயனும் அவ்வகையால் நிலைபெறும். சிவபூசையின் சிறப்பைத் தழுவக்குழைந்த பேரருளால் மெய்ப்பிக்கப்பட்டது. சேக்கிழார் பெருமான் அடி ஒட்டியே மாதவச் சிவஞான சுவாமிகளும் இதன் பெருமையை எடுத்து விளக்கியருளியுள்ளார்.

VI

இனி, திருமுறைகளில் கூறுவதை நோக்குவோம். திருஞானசம்பந்த நாயனர் 'திருக்கச்சியேகம்பத் திருவியமகப்' பதிகத்தில் அருளியுள்ளதை ஈண்டு நினைவுறுக.—

முதிமங்கை தவஞ் செய்த காலமே
முன்புமங்கை தவஞ்செய்த காலமே
வேதிர்கோளோடகில் சந்தமு ருட்டியே
வேழமோடகில் சந்த முருட்டியே
அதிராவாறு வாத்தழ வந்தோடே
யானையாடு வாத்தழ வந்தோடே
கதிர்கோள்பூண்முலைக் கம்ப மிருப்பதே
காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே.

(மூன்றும் திருமுறை-114)

என நாயனுர் அருளியதின் பொருள் : முன்பு மலையான் மகளாய் அம்பிகை சிவபிரானை நோக்கித் தவம்செய்த காலத்தில் அவர் கிழவராய் வந்தார். இப்போது கம்பையாறு அதிரவர ஆவின் ஐந்தோடு அம்பிகை கையால் தவம் (கை + தவம்) செய்த ஞான்று, தழுவத் தொட்ட அன்பிற்குக் கைதவம் (அருள்) புரியக் கதிர்கொள் பூண் முலையைத் தம்பால் உறுதியாக ஏற்றுக் கொண்டார். ஆதலின் மலைத்தவத்தை விடக் கைத்தவம் சிறந்தது போலும். ஆனைந்தோடு செய்யும் பூசனையே அத்தவமாகும்.

பட்டினத்துப் பிள்ளையார் 'திருவேகம்பமுடையார் திருவந்தாதி'யில் அம்மையார் தனமிட்டுத் தழுவியதால் தழும்புற்றவர் அடியார் மனம் விட்டகலாது புரியும் அருளாற்றலை அகத்துறையில் போற்றுகின்றார்.—

தனமிட்டு உமைதழ வத்தழும் புற்றவர் தம்அடியார்
மனம்விட் டகலா மதிற்கச்சி ஏகம்பர் வான்கயிலைச்
சினம்விட் டகலாக் களிறு வினவியோர் சேயனையார்
புனம்விட் டகலார் பகலாம் பொழுதுநம் பூங்கொடியே ! (11)

என்பது பாட்டு.

உலகுடைய நாயகி தனமிட்டுத் தழுவினள். நேரிழை அறம்புரிந்ததனல் கறை விளங்கிய கண்டர்பால் காதல் செய் முறைமை நிறைபுரிந்தது. அன்பும் அறமுமே அருளுக்குத் தகைமைசான்ற உருப்புக்களாகும்.

ஸ்ரீ அருணகிரியார் அம்மையார் தவத்துக்குக் குழைந்தது இறைவரே என்று பொருள்படப் பாடிய திருப்புகழ்வாக்கு,

இறைவர்மாற் றற்றசெம்பொன் வடிவம்வேற் றுப்பிரிந்து
இடபமேற் கச்சி வந்த உமையாள்தன்
இருளைநீக் கந்த வஞ்செய் தருளநோக் கித்தழைந்த இறைவர் (106)

என வருவதால் அறிக. இது குமரகோட்டத்தில் பாடியது. உமைபாலனும் குருவியோட்டித் திரிந்த தவமானை குணமதாக்கிச் செறிந்த அழகு காட்டிப் புணர்ந்தான். தந்தையும் தனையனும் தவத்தில் காதலுடையவர்களெனத் தெற்றென விளங்கும்.

VII

இவ்வாறு எல்லா ஆசிரியர்களும் தவத்தைப் பெரிதும் சிறப்பித்துக் காட்டியுள்ளார்கள். சங்க காலம் முதல் தவம் போற்றப்பட்டுப் பின் சைவ சமயாசாரியர்கள் காலத்திலும் சந்தானசாரியர்கள் காலத்திலும் அது சிவபூசனையே என்று விளக்கம் பெற்றது. ''வண்மையும், மாண்பும், வளனும், எச்சமும், தெய்வமும் யாவதும் தவம் உடையோர்க்கு'' என்று 'பதிற்றுப்பத்து' கூறும். தவம் துறவறத்தின் மேம்பட்டதென்பது பெரும்பாலும் பௌத்தர் கொண்ட கொள்கையாகும். பௌத்தர் தவப்பற்றைத் நன் குணம் பத்தினுள் சிகரமாகக் கருதினர்கள். (பத்துக் குணங்களாவன: பள்ளி வலம் புரிதல், தவஞ் செய்தல், தானஞ் செய்தல் என்னும் காயத்தின் குணம்

மூன்றும், மெய்யுரை, நன்வார்த்தை, இனியன கூறல், பயன்படு சொற்கூறல் என்னும் வாக்கின் குணம் நான்கும், அருணினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று என்னும் மனத்தின் குணம் மூன்றும் ஆகிய பத்தாகும்). மணிமேகலையும் காஞ்சியில் பலகால் தவம் கிடந்தனள் என்பது ஈண்டு கவனங்கொள்க.

ஆகமசாரமாகிய 'திருமந்திரம்' அருளிய திருமூலர்,—

" புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும் "

எனவும்,

" உழைக்கவல் லோர்நடு நீர்மல ரேத்திப்
பிழைப்பின்றி யீசன் பெருந்தவம் பேணி...மன்னிநல்லீரோ"

எனவும்,

" இலைந்தோட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ணி
மலர்தோட்டுக் கொண்டேன்...
தலைதோட்டுக் கண்டேன் தவங்கண்ட வாறே ",
—(7-ம் தந்திரம்)

எனவும் கூறியதை நோக்குக. சித்தத்தை சிவமாக்குவதே தவம் என ஸ்ரீ மாணிக்கவாசகர் கூறியது சிவபூசனை யென்று கொள்ளத்தகும். சரியை கிரியைகளே தவமெனக் கருதப்படும். புத்ரமார்க்கத்துக்கு விளக்காகத் திகழ்ந்த திருஞானசம்பந்தரும் தவமுதல்வர் என்றேதப்பட்டதை நினைவு கூர்க. மற்றும் தாதமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் ஒவ்வொன்றும் சரியை கிரியை யோகம் ஞானம் எனப்பட்டு, நான்கு மார்க்கங்களில் சிவபுண் ணியம் பதினறெனப்படும். இஃது சிவதீக்ஷை யின்றி செய்யப்படுவது பொது சிவபுண்ணியமென்றும், சிவ தீக்ஷையுடையராய் செய்வது சிறப்பென்றும் கூறப்படும். சரியை கிரியைகளில் காம்மியமின்றி செய்யப்படும் சிவ

புண்ணியமே தவமாகும். அது தத்துவ ஞானத்துக்கு அடிப்படையாகும். இப்பிறவியில் அல்லது முற்பிறவியில் செய்த தவப் பயனலன்றி யோகமும் ஞானமும் கை கூடா. சரியை முதலிய மூன்றும் முற்றிய பின்னர் அதன் முதிர்வு காரணமாக மலபரிபாகம், சத்திநிபாதம் எய்தப்பெற்றுத் தத்துவஞானத்தில் அவாவுற்ற ஆன்மாவுக்கு இதுவரையும் தமக்கு முதலாய் உண்ணின்று உணர்த்திய சிவ பரம்பொருளே அப்பருவம் எய்திய ஆன்மாவுக்குக் குருவுமாய் சிவஞானத்தை அருளும். ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனர் 'சிவஞானபோத' எட்டாம் சூத்திரத்தில் "தம் முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்த" என அருளியதே இதற்குப் பிரமாணமாகும். தவம் பிறவல்லவென்பதைக் குறிக்க சரியை கிரியா யோகங்களேயெனக் கிளர்ந்துரைக்கப் பட்டுள்ளது. கிரியாயோக மிரண்டற்குத் தீக்கை யொன்றென்பது, சிவபூசனையே சிவராஜயோகம் என உணர்த்துமாபோல். கிரியைகள் வேள்வி முதலாயின என்று பாட்டாசாரியன் மதம் பற்றிக் கூறுவது பசித்துண்டு பின்னும் புசிப்பான் பெறும் பயன் அளவேயாகும். அவ்வேள்வி முதலியன காமியங்களைப் பயப்பனவன்றி ஞானத்தைப் பயவா. எனவே இருவினை ஒப்பில், இறப்பில் தவத்தான் ஞானம் வந்து மருவும் எனப்பெறப்படும். இனி சாங்கியர் நையாயிகர் மதம் பற்றி ஞானம் உணர்த்துவோர், கலைஞானங்களை உணர்த்துவர்போல ஒருவரல்ல, இறைவனே என்பதும் உணரப்பெறும். பாலின் நெய்போல் மறைந்துவேருய் நிற்றலின்றி சுத்தான்மசைதன்னியமே தனக்கு சொரூபமாகக் கொண்டு தயிரின் நெய்போல் தம்முதல் குருவுமாய் உணர்த்தும். அன்னியமின்மையின் ஆன்மா அரன்கழல் சேரல் என்ற பேற்றை எய்தும். அரன் மன்னுமருட்குருவாகி வந்து மலமகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைக்கும்.

உயிர்கள் பெறும்பேறு அநந்நியத்துவம். அம்மையார் உயிர்களுள் ஒன்ருகாமையால், அம்மையார் பெற்றபேறு இயல்பாகவுள்ள அபின்னத்துவமாகும். அம்மையார் தழுவ, முலைச்சுவட்டையும் வளைத் தழும்பையும் ஏற்றது 'ஆரொளி', 'நீள்ஒளி', 'மெய்யொளி' என்றே எம் மாதவ சிவஞான சுவாமிகள் பாடுவர். சுவடு மாருதது; தழும்பு மாறக்கூடியது. இது சதாசிவரூபத்தின் தத்துவத்தை யும், சிவலிங்கபூசையின் தத்துவத்தையும் உள்ளடக்கி உணர்த்துகிறது. அம்மையார் தழுவக் குழைந்த மாண்பு இச் சைவ சித்தாந்த கொள்கைகளைத் தெற்றென விளக்குகின்றன.

VIII

தமிழ்ப் பெருங் கவிகளும் தழுவக்குழைந்த சிறப் பைக் கவின்பெறப் பாடியுள்ளார். இரட்டைப் புலவர் கள் தாம் பாடிய பிரபந்தங்களில் 'திருவேகம்பரந்தாதி யில் அகத்துறையில் அமைந்த,—

தனிந்த மேயன்பர்க் காகிநின் றேன்றமிழ்க் கச்சிக்கம்பத்
தனித்தன மேயன்ப ராசக்தி பூசனை கொண்டபுனி
தனித்தன மேய பசப்பொழி யான்மற்றோர் சார்புமில்லேந்
தனித்தன மேயன மேயினி யேதுய்யத் தக்கதுவே! (79)

என்ற பாட்டு, நித்தனும் அப்பிரமேயனுமான புனிதன் பராசக்தியின் பூசனையை கொண்டு குழைந்ததுபோல், இளமுலைகளின் பசலையைப் போக்கியருளுவார், ஒருசார்பு மில்லாது தனித்திருக்கும் (உயிராகிய) பெண்ணே! இனி ஏது உய்யத்தக்கது! என்று பொருள்படுகிறது. (இது தலைவன் நீடத் தலைவி வருந்தல் என்ற துறை). பாதகம் அஞ்சனவெற்பாக ஈட்ட, நற்பண்பு விரும்பாது, கை மஞ்சனம் ஆட்டாது பன்னு நா புகழ்த்தக செப்பாது ஏகம்பனின் தலையளி எவ்வாறு எய்தும்? என்பது

பொருள். "கம்பாகம் பாநதிப் பாற்(ல்)பூசை, செய்கவு ரிக்கருணைக் கம்பாகம் பாவித்த கோவின் அருளைப் பெருவது பூசனை செய்வதேயாகும்" என்பது மற்றொரு பாட்டின் (93) கருத்து. 'ஏகாம்ப நாதருலா'வில் 'இச்சையுடன் தேசுதரும் பழைய திவ்யாகமப்படியே பூசைதனை யொழிந்து போகாதே, மாசிலா அன்புடைமை தன்னை அகன்றால் அறன்மேனி என்படுமோ என்பதனை எண்ணியோ, தன் பழைய பெண்மை அன்போ, பிறப்போ பெருங்காதல் திண்மையோ, கற்போ தெரிகிலேம், உண்மை மறை படைத்த மேனி வளையால் முலையால் குறிபடுத்தி மார்பு குழைய நறைபடைத்த தாழ்ந்த புரிகுழலாள் தானுக அம்மனல் மேல் வீழ்ந்து தழுவ வெளிப்பட்டான்!' என இரட்டைக் கவியர் வியப்பெய்துவர் (கண்ணிகள் 40–44). இன்னும் 'நீடிமிக ஓங்கி வளர் தன்னுரிய பரிணுமமெல்லாம் தாங்கிய வித்தன்ன தனத்திருள் நீங்காத ஏகம்பரைத் தழுவி ஆகங்குழைந்த அற்புதம்' உயிர்கள் பொருட்டாகும் என்றும் கூறுவர் (கண்ணிகள் 194-96). இறைவன் திருமேனியில் இருந்த தழும்பு என்ன தழும்பு? என்று ஒருத்தி வினவ, மற்றொருத்தி,—

"மின்னே, கிளியே, இளங்கிழையே அன்னமே
அன்னே இதனை அறியாயோ? தன்னருளால்
பாராட்டி வையம் பதினு லையும் வளர்த்தும்
போராட்டி மாதவத்தின் பேறு காண்"

எனத் தலைவி அம்மையாரின் தவத்தின் பெருமையைக்காட்டும் சின்னம், அத்தழும்பு எனக்கூறுவார். (கண்ணிகள் 256-58). 'ஆனந்தக்களிப்பு' என்றபாட்டில் சிவபெருமான் எடுப்பது பிச்சை அமுது, மார்பில் ஏற்பது காமாட்சி கொங்கைச் சுவடாம்! என ஏசி பாடியதூஉம் மகிழத்தக்கதாம்.

இனி 'ஸ்ரீமூகபஞ்சசதீ' என்ற அழகிய வடமொழி சுலோகங்களில் மூககவி காமாட்சி அம்மையார் தழுவக் குழைந்த தவத்தைப் பல விடங்களில் எடுத்துப் பாடியுள்ளார். அம்மை காஞ்சியில் ஆகமங்கள் எல்லாம் சிரசில் அணியும் மொட்டாகவும், நித்தியானந்த ஸ்வரூபஅத்வைதத் தளிராகவும் விளங்கும் ஆதிசக்தியாய் விளங்குகிறார். 'ஆகமவதம்சகலிகா மானந்தாத்வைத கண்டலீம்வந்தே!' எனப் புகழப்பட்டவர் தேவி. இப்பேர்ப்பட்டவர் பூரித்தெழுந்த ஸ்தனங்களோடும், கைவளைகளோடும் இறைவரை ஆலிங்கனம் செய்த காரணத்தால் தன் பதியான சங்கரரது சரீரத்தில் அடையாளமுண்டாகச் செய்தவள், நித்தியமான யௌவனத்தோடு கூடியவள், வியக்கத்தக்க பாலஸ்வரூபத்தைக் கூடியவளைக் காஞ்சியில் தரிசிக்கிறோம் என்பது மற்றொரு ஸ்லோகம்.—

ஆலிங்கத சங்காதேகா மந்தரிதோ ரோஜகங்கணுஸ்லேஷை;
ஆதிகாஞ்சி நித்யதருணீ—மத்ராக்ஷம் காஞ்சிதப்யுதாம் பாலாம்||.

மேலும், சதாசிவம் என்ற பஞ்சணையிலே துயில்கொள்பவளே, 'சித்' என்னும் பூங்கொடியே! என்றெல்லாம் சித்தாந்தப் பொருள் கொள்ள வர்ணிக்கப்பட்டுள்ளது. மற்றொரு பனுவலில் காமக்கோடி சக்ரரூபிணியாகிய காமாக்ஷியே! தக்ஷனைக் கடிந்த பரமசிவனை மார்பில் இறுகத் தழுவும் சமயத்தில் நெருக்கத்தினால் நீண்டு தொங்கும் முத்துமாலை நழுவ, எந்த புன்னகையால் மீண்டும் நிலையில் நிற்கிறதோ, அந்த மாலையின் கிரணம் எனது உள்ளத்தில் விளையாடட்டும் என கவி நயம்படப் பாடுகிறார். கம்பாநதி தீரத்தில் வேதங்கள் என்ற காட்டு வழிகளிலே கிருபையாக தேனைச் சொரியும் 'சித்' என்னும் பூங்கொடியே! என அம்மையை வர்ணிப்பது, மீமாம்சிக கர்மாக்களை விட (காட்டு வழி) ஆகம பூச

ஊயே சிறந்ததென அம்மையார் பூங்கொத்தென கம்பா நதி தீரத்தில் தானே முதல் சைவராய் தவ முதல்வியாய் யாம் உய்ய வழிகாட்டிய பான்மையையும் கவி பாடுகிறுர். இவை யெல்லாம் உன்னி உன்னி ஈடேறுவோமாக!

IX

அரிதாகிய மானிடப் பிறவி எடுத்த நாம் குருவின் அருளால் பெறப்பட்ட உடையவரை (இஷ்ட லிங்கத்தை)த் தொட்டு அன்புடன் பூசை செய்வது நியதி. இந்த உரிமையும் அருகதையும் ஆசாரியரிடம் தீக்ஷை பெற்றதின் பயனுகும். மற்றையவர்கள் திருக் கோயில்களில் ஆகம விதிப்படி வகுத்த முறைகளில் தொழுவது சாலும். முதற்கண் தத்தம் இல்லங்களில் ஒவ்வொருவரும் பெரியோர்க்கும் தெய்வத்துக்கும் செய்யத்தகும் அன்பையும் பூசனையையும் வளர்க்கவேண் டும். சிறியவர்கள் பெற்ருேர்களைக் காலையில் காலில் விழுந்து தொட்டுக் கும்பிடப் பயில்வித்தல் நல்லது. சீடர்கள் ஆசாரியரை அன்புடன் வணங்கி உபசரணைகள் செய்ய அப்பியசிப்பது நல்லது. பெண்கள் கணவர்களைத் தொழுதெழுந்து பணிவிடைகள் செய்யப் பயில்வது சாலத்தகுந்தது. இவ்வாறு அன்பு கெழுமிய காலத்து எந்நிலையிலும்அநந்நியத்துவம் தானுகவே விலகும்.ஆன்ம நேய ஒருமைப்பாடு வளரும். வெவ்வேறு இடங்களில் அவ் வவ்விடங்கட்குத் தக்கவாறு கட்டுப்பாடுகள் வழக்காற் றில் வந்துள்ளவைகள் முழுதும் தீதென்றும், யாவையும் தக்கதென்றும் செப்பல் அரிது. உண்மைத் தவம் நேர்ந் துழி வேற்றுமைகள் கண்படா. தவமின்றி அன்பு நெகிழாது விதிமுறையால் பூசித்த சிவகோசரியார்க்கும் அன்பு முறையால் பூசித்த திண்ணனுர்க்கும் இறைவர் முத்தியளித்தார். அன்பின் சிறப்பால் கண்ணப்பர்

செய்த மெய்த்தவம் ஆறு நாட்களில் பலன் எய்தியது. தழுவக் குழைந்த மான்மியத்தில் இருமுறை பூசனையின் சிறப்பையும் நாம் உய்வான் வேண்டி முதற் சைவனை பரமேசுவரன் காட்டியுள்ளார். இத்தகைய சைவ சித்தாந்த உண்மைத் தத்துவங்கள் இருளகற்றி, அருள் தரும் பெற்றியதாகையால் உலகெங்கும் இச் செம் பொருள் விளங்கவேண்டுமென்று தமிழ்க் கச்சியில் நம் முழுமுதல் கடவுளைப் பிரார்த்திக்கத் தக்கதாகும்.

இதுகாறும் கூறியவற்றால் சைவர்கள் சரியை கிரியாதி தவங்களைச் செய்து, தீக்கை பெற்று சிவபூசனை செய்து சிவஞானம் பெற்று சிவபோகந் துய்க்க முயல் வதே நன்னெறியாகும் என்பது தேற்றம். இதுகூறி அடியேனது உரையை முடிப்பேன். குற்றங்குறைகளை நீக்கி நல்லதை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!

திருச்சிற்றம்பலம்

நல். மு.

சமாஜ வெளியீடுகள்

	ரூ.	பைசா
திருவாசகம் (எட்டாம் திருமுறை)	1	00
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை)	1	00
சமாஜ 63-ஆம் ஆண்டு விழா மலர்	0	50
காயசித்தி	1	00
திருமந்திரச் சம்பிரதாயம்	0	50
சைவ சமயச் சொற்பொழிவுகள்	2	00
ஞானியாரடிகள் நினைவுமலர்	1	00
முருகன் முந்நூல் 0 50 அறுபத்து மூவர்	0	06
வைர விழா மலர் 2 00 அறப்பயிற்சிமாலை	0	50
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல—120 காரணங்கள்	0	50
திருமயிலையும் பூம்பாவையும்	0	50
முருக வழிபாடு அல்லது முருக தத்துவ அருள் விரத வழிபாடு 0 75 பிரதோஷ வழிபாடு	0	20
நான் நம்புவன சில 0 10 விநாயகர் வழிபாடு	0	20
கூட்டுவழிபாட்டுப் பாமாலை	0	20
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி—பொன் விழா வெளியீடு	1	25
கந்தரனுபூதி—யந்திர உரையுடன்	1	25
சிவஞானபோதம்—எளியவுரை 2ஆம் பதிப்பு	1	00
திருவெம்பாவை—விசேட உரையுடன்	0	75

தபால்—ரயில் செலவு தனி.

" சித்தாந்தம் "—சிறந்த மாதப் பத்திரிகை

ஆண்டுச் சந்தா ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 50.

" சைவ சித்தாந்தா "—ஆங்கில முத்திங்கள் வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூ. 5. ஆயுள் சந்தா ரூ 100.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4

முருகன் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14

கீழ்க்காணும் அன்பர்கள் நம் சமாஜ ஆயுள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1.) திரு. அ. காளியப்பன் அவர்கள், ஆசிரியர்,
ஊ. ஒ. தொடக்கப்பள்ளி, தத்தனூர்.
சாவக்கட்டுப்பாளையம் அஞ்சல்,
கோபி வட்டம், கோவை மாவட்டம்.

2.) திரு. டாக்டர் G. விஸ்வநாதன், எம். பி., பி. எஸ்.
அவர்கள்,
20, ரயில்வேஸ்டேஷன் ரோடு,
ஸ்ரீரங்கம், திருச்சி–6.

3.) திரு. P. திருஞானசம்பந்தம் பிள்ளை, எம்.ஏ., எல்.டி.
அவர்கள்,
2/10 சாம்பசிவம் தெரு, தியாகராயநகர்,
சென்னை–17.

4.) வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை
அவர்கள்,
3/9 குளக்கரை சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை–34.

5.) வித்துவான் திரு. K. வெள்ளைவாரணனார் அவர்கள்
ரீடர், தமிழ் ஆராய்ச்சித்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர் அஞ்சல்,
தெ. ஆ. மாவட்டம்.

6.) புலவர் இளமணி
திரு. தா. மு. சுப்பிரமணியன் அவர்கள்,
86, தம்புசெட்டித் தெரு,
சென்னை–1.

பிற செய்திகள்

கன்னியாகுமரி மாவட்டம், கணபதிபுரம், அன்னவிநாயகர் அருட்பணிமன்ற ஆண்டுவிழா 2—12–1969 அன்று சுவாமி மதுரானந்தா அவர்கள் தலைமையில் நடந்தது. சங்கச் செயலாளர். வித்துவான். சி. குமரேசபிள்ளை அவர்கள், மன்ற நோக்கங்கள் பற்றியும், உயர்திரு S. தங்கவேல் நாடார் B. A. அவர்கள் வழிபாட்டுச் சிறப்பு பற்றியும் சொற்பொழிவாற்றினர். பஜனை, தீபாராதனை, மகேசுரபூஜை ஆகியவற்றுடன் விழா இனிது நிறைவுற்றது.

சேலம் பொத்தனூர் திருமுறை மன்றச்சார்பில் 8—12—69 அன்று திரு. S. K. இராமராசன் அவர்கள் அருணகிரிநாதர் என்பது பற்றி மிகச்சிறப்புற விரிவுரை யாற்றினார்கள்.

திருப்பாண்டிக் கொடுமுடி மகுடேசுவரர் திருக் கோயிலில் 15—12—69 அன்று சங்காபிடேகம் நிகழ்ந்தது. அத்துடன் காலையும் மாலையும் உயர்திரு N. கிரிதாரி பிரசாத் அவர்கள் தலைமையில் திருமுறைவிழா நிகழ்ந்தது. பல அன்பர்கள் பன்னிரு திருமுறைகளையும் பற்றி விரிவுரை யாற்றினார்கள்.

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் நடத்திவந்த மாயூரவாகனசேவனத் திருநாள் 8—1—70, 9—1—70 ஆகிய நாள்களில் திருவான்மியூர் ஸ்ரீ மயூரநாததேவத் தானத்தில் சிறப்பாக நிகழ்ந்தது. பல அன்பர்கள் பாம்பன் சுவாமிகள் பற்றியும் அப்பெரியார் இயற்றிய அருணூல்கள் பற்றியும் விளக்கிப் பேசினார்கள்.

சைவப் பெருமக்களால் கோயில் எனப் போற்றப் பெறும் தில்லையில் பதஞ்சலி முனிவரால் பூசிக்கப் பெற்ற அனந்தீசுவரசுவாமி கோயிலில் புதிய திருப்பணிகள் பல செய்யப்பெற்று 9-2--70 அன்று அஷ்டபந்தன மகாகும்பா பிடேகம் நிகழும்; சைவப்பெருமக்கள் யாவரும் சென்று கண்டு பிறவிப் பெரும்பயனைப் பெற வேண்டுகின்றோம்.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச்சார்பில் 15-12-69ல் திருவேகம்பத்தில் திருமுறைக்கோயில் வழிபாடும் 24—12—69ல் மெய்கண்டார் சந்நிதியில் திருவாதிரை வழிபாடும் 28—12—69ல் குமரகோட்டத்தில் வார வழி பாடும் 9—1—70ல் காமாட்சியம்மன் சந்நிதியில் மார்கழி வெள்ளி வழிபாடும் சிறப்புற நிகழ்ந்தன. புலவர் மாமணி திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் அவ் வமயங்களில் சொற்பெருக்காற்றி மகிழ்வித்தார்கள்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.